# ஆச்சார்யா கிருபளானி



- ஆர். பட்டாபிராமன்

சிறு வெளியீடு மே 2023

ஆச்சார்யா கிருபளானி



நவீன இந்தியாவின் அரசியல் விவாத களத்தில் கிருபளானி குறிப்பிடத்தகுந்த பங்காற்றியவர் . ஆழமான அறிவு மற்றும் அனுபவங்களின்பாற்பட்டு கருத்துக்களை ஒளிவு மறைவின்றி எடுத்துவைத்தவர். பல சோசலிஸ்ட் தலைவர்கள் போலவே மார்க்சியம்- காந்தியம் குறித்த உரையாடல்களில் ஆழத்தோய்ந்தவர்.

விடுதலை இந்தியாவில் எதிர்கட்சி தலைவராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டவர் ஆச்சார்யா கிருபளானி . காங்கிரசில் இருந்தபோதும், பிரஜா சோசலிஸ்ட் தலைமையில் ஆனாலும் கட்சியின் கொள்கைகளை அப்படியே பிசகின்றி பின்பற்றும் மனோபாவம் கொண்டவராக கிருபளானி தன் அரசியலை அமைத்துக்கொள்ளவில்லை. தவறு என்று தான் உணரும் ஒன்றுடன் சேர்ந்து உழைப்பதில்லை என்கிற காந்திய மனோபாவம் அவரிடம் இருந்தது.

இந்த சிறு வெளியீடு இரு நீள் கட்டுரைகளை தாங்கி வருகிறது. நவீன இந்தியாவின் கட்டுமானத்திற்கு ஏதோவொரு வகையில் பங்களித்த பல பெரியவர்கள் குறித்து மிகச் சுருக்கமாகவாவது தெரிந்துகொண்டு அதை எழுதிப்பார்க்கவேண்டும் என்ற அவஸ்தையில் பலர் குறித்து நவீன இந்தியாவின் பன்முகக் குரல்கள் என்ற வெளியீட்டைக் கொண்டுவந்தேன். எவரும் அதை தரவிறக்கம் செய்து வாசித்துக்கொள்ளலாம். அதில் ஒரு கட்டுரை கிருபளானி குறித்த சில குறிப்புகளாக அமைந்தது.

விடுதலைக்காலம்வரை காந்தி- நேரு- படேல்- பிரசாத் என மிக முக்கியமானவர்களுடன் இணைந்து பயணித்தவர் கிருபளானி. இணைந்து எனச் சொன்னால் உராய்வே இல்லை எனச் சொல்ல முடியாது. உராய்வுடன் உறவாடி பயணித்தவர். சிந்துவில் பிறந்து வளர்ந்து, அப்பகுதி பாகிஸ்தான் சென்ற பின்னரும் ஒன்றாக இருந்தபோதும், பிற இந்தியப் பகுதிகளில் ஊரைவிட்டு வெளிவந்து விடுதலைக்கால நிகழ்வுகளில் போராட்டங்களில் ஈடுபட்டவர் கிருபளானி.

விடுதலைக்குப் பின்னரான காலத்தில் நேருவுடன் சிக்கல் ஏற்பட்டது. வெளியேறி தனிக்கட்சி உருவாக்கியவர். ஜேபி- லோகியா போன்ற சோசலிஸ்ட்களுடன் கட்சிப் பணியாற்றியவர். தனி அங்கீகாரம் என அவர் வாழ்வில் பெற்றாலும் அரசியலில் பெரும் வெற்றியைக் காணாமல் – தொடர்ந்து இந்திய அரசியல் நினைவில் ’காணாமல் போனவர்களில்’ ஒருவர்.

அவரின் ’எனது காலம்’ பிரம்மாண்டமான நூல். இக்காலத்தில் போதிய கவனம் பெறாத நூல். அதை வாசித்த போது முகநூலில் அவ்வப்போது சில இடுகைகளை செய்தேன். இரண்டாவது கட்டுரை அந்த இடுகைகளின் சுருக்கமான தொகுப்பாக இங்கு இடம் பெற்றுள்ளது.

இரு கட்டுரைகளும் ஓரளவிற்கு கிருபளானியை அறிமுகப்படுத்தும் - அர்த்தப்படுத்தும் எனக் கருதுகிறேன்.

7-10-2022 - ஆர். பட்டாபிராமன்

## கிருபளானி வாழ்வில்..

ஜீவத்ராம் பகத்ராம் கிருபளானி இன்றுள்ள பாகிஸ்தானின் சிந்து பகுதியில் 1888ல் பிறந்தார். அவரது ஜாதகம் தொலைந்துபோனதால் அவரால் தனது பிறந்த மாதம் தேதியை சரியாக சொல்லமுடியவில்லை. அவரைப்பற்றி எழுதக்கூடியவர்கள் அபுல்கலாம் ஆசாத் பிறந்த நாளில் அவர் பிறந்ததாக அறிந்து நவம்பர் 11, 1888யை குறிப்பிட்டு வருகின்றனர்.

கிருபளானி தந்தையார் தாசில்தாராக இருந்தவர். அக்குடும்பத்தில் எட்டு குழந்தைகளில் ஆறாவதாக பிறந்தவர் கிருபளானி. தந்தை வைஷ்ணவ பற்றாளர். குடும்பத்தில் இரு மகன்கள் இஸ்லாமிற்கு மாறினர். கிலாபத் இயக்கம், துருக்கியை காப்பாற்றுதல் என சென்று மறைந்தனர். கிருபளானியின் மாணவர் பருவம் பம்பாயில் கடந்து போனது. அவரது அறை முழுவதும் ஆங்கில கவிதை நூல்கள் இருந்தன. வங்கப்பிரிவினையின்போது மாணவர்கள் கிளர்ச்சியில் கிருபளானி ஈடுபட்டதால் கல்லூரிகள் அவரை சேர்க்க மறுத்தன. பின்னர் புனே பெர்குசான் கல்லூரியில் 1907ல் சேர வாய்ப்பு கிடைத்தது.

சிந்து மாகாணத்தில் வரலாறு, பொருளாதார முதுகலைப்படிப்பை அவர் முடித்தார். முசபர்பூர் கல்லூரியில் 1912ல் வரலாற்று பேராசிரியர் பணியில் சேர்ந்தார். அடுத்த 5 ஆண்டுகளுக்குள் காந்தியுடன் நேரடி தொடர்புகொண்டவராக கிருபளானி மாறினார். பெரோஷ்மேத்தா, கோகலே, பானர்ஜி என மிதவாதிகளுக்கும் திலகர், பிபன் சந்திரபால், அரவிந்தர் போன்ற தீவிரவாதிகளாக அறியப்பட்டவர்களுக்கும் இடையேயான மோதல் களமாக காங்கிரஸ் இருந்தது. கிருபளானி இளைஞர்கள் பலரைப்போல தீவிரவாதிகள் பக்கம் ஈர்க்கப்பட்டார். காந்தி தன்னை கோகலேவின் சீடர் என அறிவித்திருந்தாலும் அவரின் மனோதைரியம் கிருபளானியை கவர்ந்தது. பேச்சில் தீவிரவாதமும் நடைமுறையில் அதைக் காட்டாமல் இருப்பவர்கள் மத்தியில் காந்தியின் தைரியமான அணுகுமுறை மேலானது என கருத துவங்கினார் கிருபளானி.

பேராசிரியர் ஊதியத்தில் மிக சிக்கனமாக செலவை செய்துவிட்டு பணத்தை வங்கப் போராளிகளுக்கு அனுப்பிவந்தார் கிருபளானி. காந்தியுடன் தொடர்ந்து 10 ஆண்டுகள் பழகி விவாதித்து பின்னர் அவரின் கருத்துக்களுடன் ஒத்துப்போகும் நிலையை கிருபளானி மேற்கொள்கிறார். காந்தியை முசாபர்பூர் அழைத்துவந்து தன்னுடன் தங்க வைக்கிறார். கல்லூரி முதல்வரிடம் கிருபளானி குறித்து அரசாங்கம் விளக்கம் கேட்டது. கிருபளானியை காப்பாற்றும் வகையில் பதிலை முதல்வர் தந்துகொண்டிருந்தார்.

ஆனாலும்  காந்தி வந்துபோன 15 ஆம் நாள் கிருபளானி கல்லூரி ஆசிரியர் பதவியிலிருந்து வெளியேற்றப்படுகிறார்.

1917 முசபர்பூர் பகுதி சார்ந்த சம்பரான் போராட்டத்தில் அரசாங்கத்தை எதிர்த்து காந்தி நின்றவிதம் அவர் பெயர் நாடுமுழுவதும் பிரபலமாக உதவியது. இந்நிகழ்வு கிருபளானியை நெகிழவைத்தது, டாக்டர் ராஜேந்திரபிரசாத்துடனும் தோழமை கிட்டியது. பெரும்பாலான நேரத்தை காந்தியுடன் செலவழிப்பதையே கிருபளானி விரும்பினார். சில மாதங்கள் பண்டிட் மதன் மோகன் மாளவியாவிற்கு தனிச் செயலராக இருந்தார்.  18 மாதங்கள் பனாரஸ் இந்து பல்கலைகழகத்தில் ஆசிரியராக இருந்தார்.  பின்னர் காந்தியுடன் அவரது நடவடிக்கைகளில் தன்னை  ஈடுபடுத்திக்கொண்டார்.

பிரிட்டிஷாரின் ரௌலட் சட்டம், ஜாலியன்வாலாபாக் படுகொலைகள் காந்தியின் அகிம்சை முறைப்போராட்டங்கள் மீதான சந்தேகத்தை கிருபளானி அவர்களுக்கு தராமல் இல்லை. 1922 ஒத்துழையாமையை சௌரி சௌராவை காண்பித்து அவர் விலக்கிக்கொண்டது கடும் விமர்சனங்களுக்கு உள்ளானது. அந்நேரத்தில் காந்தியின் பக்கம் கிருபளானி மிகுந்த நம்பிக்கைவைத்து நின்றார். அதேபோல் சுயராஜ்யவாதிகள் சட்டமன்றங்களுக்கு செல்லவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தபோது காந்தி அதை ஏற்கவில்லை. காந்தி பக்கம் கிருபளானி  அப்போதும் நின்றார்.

1920 பனாரஸில் பேராசிரியராக இருந்தபோது 'காந்தி ஆசிரம்' என ஒன்றை அங்கு அமைத்தார் கிருபளானி.  இளம் டாக்டர்கள், வக்கீல்களுடன் சேர்ந்து சத்தியாக்கிரக போராட்டத்தை தீவிரப்படுத்தினார். கைது செய்யப்பட்டார்.  காசி வித்யாபீடம், வல்லபாய் பட்டேல் முயற்சியால் நிறுவப்பட்ட  குஜராத் வித்யா பீடம் என இரண்டிற்கும் சென்று ஏராள இளைஞர்களுக்கு தேசப்போராட்ட உத்வேகத்தை கிருபளானி ஏற்படுத்தினார். காந்திக்கு விருப்பமாக இருந்த குஜராத் வித்யா பீடத்தில் 5 ஆண்டுகள்  பணி செய்துகொண்டிருந்தபோதுதான் அவர் ஆச்சார்யா என அழைக்கப்படலானார்.

1934ல் காங்கிரசில் செயலர் பொறுப்பு அவருக்கு தரப்பட்டது. பணிநிமித்தம் நாடு சுற்றமுடிந்தது. வறட்டுத்தனங்களுக்கு இடம் கொடுக்கவிரும்பாத, தனது சொந்த அனுபவங்கள் அடிப்படையில் பக்குவமாக அவர் வளரத்துவங்கினார். தலைமை பண்புகளுக்குரிய கட்டுமானங்கள்  அமைந்த  மனிதராக கிருபளானி உயரத்துவங்கினார். அவர் இயல்பிலேயே சற்று கூச்ச சுபாவம் உடையவராக இருந்தார், விளம்பரம் தேடிகொள்ளாதவராகவும், எளிமையாக இருக்கவும் கற்றார்.

அவர் கூட்டங்களில் ஏறி  நின்று உஷ்ணம் கிளப்பும் பேச்சாளர்  அல்லர். பொறுப்புடன் பாதை காண வேண்டும் என்கிற தவிப்புள்ளராக இருந்தார். சகமனிதர்களுடன் கருத்து

வேறுபடும்போது தனிப்பட்ட தாக்குதல்கள் கூடாது என நினைத்தார். ஆனால் அனல் பறக்கும் விவாதங்களை அவர் நடத்தாமல் விட்டதில்லை. நாடாளுமன்ற உரைக்காக பிறந்தவர் போல் அவரது உரைகள் அமைந்ததாக அவரைப் பற்றி எழுதிய பார்கவா தெரிவிக்கிறார். குறிப்புகள் எடுத்துக்கொண்டுபோனாலும் அவர் வேகமான சிந்தனை ஆற்றல் தெறிக்க பேசுவதுபோல் இருக்கும் என்கிறார் பார்கவா.

அக்சாய் குன்றுகள் சீனா கைப்பற்றியது குறித்த விவாதத்தில் அவர் நேருவை பதில் சொல்லமுடியாத அளவு கடுமையாக விமர்சித்தார். தொலைநோக்கில் கனவுலகில் கிருபளானி எப்போதும் இருக்கிறார் என நேரு விமர்சித்தார். அதற்கு பதிலாக ஆம் நமது தொலைநோக்கும் கனவும் பலித்தன. இனியும் பலிக்க வேண்டுமென்றார் கிருபளானி.

1946வரை அவர் காங்கிரசின் செயலராக இருந்தார். சுபாஷ் தலைவராக இருந்தபோது அவருடன் கிருபளானிக்கு ஒத்துப்போகவில்லை. ஜவஹர் தலைவராக இருந்தபோதும் அவ்வளவாக உடன்பட்டிருக்கவில்லை. 1946 இறுதியில் காங்கிரஸ் தலைவராக கிருபளானி இருக்கவேண்டும் என காந்தி விரும்பினார். எதிர்ப்பு கிளம்பியது. அனைத்தையும் மீறி காந்தி உறுதியாக இருந்ததால் அக்டோபர் 1946ல் கிருபளானி காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டே கருத்து வேறுபாடுகள் காரணமாக அவர் பதவி விலகவேண்டியிருந்தது.

1950ல் ஜவஹர்லால் மீண்டும் கிருபளானி காங்கிரஸ் தலைவராக வரவேண்டும் என விழைந்தார். புருஷோத்தம்தாஸ் அவர்களை பட்டேல் மற்றும் வலது பிரிவினர் நிறுத்தினர். புருஷோத்தம் தாஸ் டாண்டன் 1306, கிருபளானி 1092 வாக்குகள் வாங்கினர். நேரு தான் தோற்றதாகவே எடுத்துக்கொண்டார். நேரு கிருபளானிக்கு நேரிடையாக இறங்கி பணியாற்றவில்லை. ஆனால் பட்டேல் டாண்டனுக்காக பணியாற்றினார். பட்டேல் அவ்வாண்டே மறைந்தார். கிருபளானியை மத்திய கமிட்டியில் இணைக்க நேரு கோரியபோது டாண்டன் ஏற்க மறுத்தார். தனக்கு இனி காங்கிரசில் இடமில்லை, வகுப்புவாதிகளை உள்ளிருந்து போராடமுடியவில்லை என்கிற உணர்வு கிருபளானிக்கு உருவானது. அவர் 1951ல் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி என்பதை உருவாக்கினார்

II

காந்தி கிருபளானியை பேராசிரியர் ('Professor') என்றுதான் அன்புடன் அழைத்துவந்தார். விடுதலைக்கால 'நேரு சர்க்கார்' தான் காங்கிரஸ் பொறுப்பில் இருந்தபோது கொள்கை அமுலாக்கம் குறித்து தன்னுடன் கலந்து பேசவில்லை என்கிற வருத்தம் கிருபளானிக்கு இருந்தது. நாடுபிரிவினை குறித்த சிம்லா மாநாட்டிற்கு ஜின்னா எதிர்க்கிறார் என்கிற பெயரில் காங்கிரஸ் தலைவராக இருந்த கிருபளானி அழைக்கப்படவில்லை.

நேருவை ஒப்பிடுகையில் கிருபளானி பட்டேலிடம் தள்ளியே இருந்தார். மதசார்பின்மை பிரச்சனையில் நேரு போல அவ்வளவு உறுதிப்பாட்டுடன் பட்டேல் இல்லை என்பது தலைமைபண்புக்குரிய அழகல்ல என்று கிருபளானி கருதினார்.

அப்போதுதான் நாடு விடுதலை அடைந்துள்ளது என்பதாலும் நேரு மீதான கவர்ச்சி உச்ச அளவில் இருந்ததாலும் கிருபளானியின் கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி (கே எம் பி பி) போன்ற எதிர்கட்சிகள் மக்களிடம் போய் சேரமுடியவில்லை. 1952ன் பொதுத்தேர்தலை அக்கட்சி பிறந்தவுடனேயே சந்திக்க நேர்ந்தது. கிருபளானி உட்பட கட்சியினர் தோற்றனர். காங்கிரசிற்கு மாற்றாக ஜனநாயக சக்திகள் இணைவதை- சோசலிஸ்ட்களுடன் இணைவதை அவர் விரும்பினார். ஆனால் சோசலிசம் என்பதை வறட்டு கோட்பாடாக பேசுவதை ஏற்கமுடியாது என்றார். சமுக நீதி என்பதே இப்போது சரியான முழக்கம் என்றார். சோசலிசமா சமுகநீதியா என்கிற கட்டுரை ஒன்றைக்கூட அவரது தொண்டர்கள் விளக்கத்திற்காக எழுதினார்.

1954 பிரஜா சோசலிஸ்ட் கட்சியின்(PSP) நாக்பூர் மாநாட்டிற்கு அவர் தலைமை வகித்தார். அங்கு கோஷ்டி சண்டைகளும் தனிநபர் தகராறுகளும் இருப்பதை கண்ணுற்று தான் ஏமாற்றம் அடைந்ததாக கருதினார். இடைத்தேர்தல் ஒன்றில் காங்கிரஸ் அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தவில்லை, கிருபளானி நாடாளுமன்றம் சென்றார். 1957லும் அவர் வெற்றி பெற்றார். ஆனால் 1962ல் அவர் கிருஷ்ணமேனனிடம் தோற்றார். பிறகு இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது துணைவியார் சுசேதா கிருபளானி உத்தரபிரதேசத்தில் காங்கிரசை வழிநடத்திக்கொண்டிருந்தார். துணைவியாரின் அரசியலை முன்வைத்து கிருபளானி மீது சில விமர்சனங்கள் எழுந்தன. சுசேதா தன் கணவரின் காந்திய கொள்கைகளை ஏற்காத நபரல்ல என்கிற விளக்கம் தரநேர்ந்தது.

1920களில் சுசேதா (Sucheta) இளம்பெண்ணாக கிருபளானி உறவினர் வீட்டில் தங்கி மாஸ்டர் டிகிரிக்கு (MA) டெல்லியில் படித்துக்கொண்டிருந்தார். நட்பு ஏற்பட்டு காதலாக மாறியது. இருவரும் பீகார் நிலநடுக்கத்தின்போது களப்பணியாற்றினர். சுசேதா பனாரஸ் பல்கலைக்கழக பேராசிரியர் பணியில் சேர்ந்தார். காந்திஜி சிறையில் இருந்ததால் அவர் ஒப்புதலை பெற்று மணமுடிக்கலாம் என இருவரும் மூன்று ஆண்டுகள் காத்திருந்தனர். காந்திக்கு திறமையான கிருபளானியை இழந்துவிடக்கூடாதே என்கிற தயக்கம் இருந்தது. நாங்கள் இருவரும் காங்கிரசில் பணிபுரிவோம் என சுசேதா உறுதியளித்தார். ஆனால் காந்தி வேறு ஒருவரை பார்த்து மணந்துகொள் என்றே அறிவுறுத்தினார். சுசேதா காந்தியுடன் விவாதம் செய்து பிடிவாதமாக கிருபளானியைத்தான் மணப்பேன் என்றார். காந்தியும் தனது ஏற்பை நல்கினார். கிருபளானி பொதுவாக உணர்ச்சிகளை

வெளிக்காட்டாதவராக இருப்பார். காந்தி இறந்தபோது கூட அவர் அழவில்லை. அப்படியே உள் உறைந்துபோனார்.

கால இடைவெளிகளில் அரசாங்கங்களை மாற்றுவதுதான் ஜனநாயகம். எவ்வளவு சிறந்த அரசாங்கமாக இருந்தாலும் அதை தொடர்ந்து நீடிக்கவிட்டால் அது மக்களிடம் பாராமுகம் கொள்ளும். லஞ்ச ஊழலுக்கு உள்ளாகும் என்பதை அழுத்தமாக பேசிவந்தார் கிருபளானி. அரசாங்கம் தன்னை அமைத்துக்கொள்வதில் அன்றாட நடவடிகைகளில் சிக்கனமாக இருக்கவேண்டும் என விரும்பினார். அவசியமற்ற செலவுகளை ஆடம்பரங்களை தவிர்க்கவேண்டும் என்கிற விமர்சனப்பார்வையை வெளியிட்டுவந்தார். நிர்வாக நேர்மை இல்லையெனில் எதையும் சாதிக்கமுடியாது. மாநிலத்திலும், மத்தியிலும் மிருகபலம் இருக்கிறது என்பதாலேயே ஆரோக்கியமான விமர்சனங்களைக்கூட ஆட்சியில் உள்ளோர் பொருட்படுத்தாவிட்டால் ஜனநாயகத்திற்கு ஆபத்து நேரும் என்றார்.

கலாச்சாரம் என்பதை மொழியுடன் சமப்படுத்தி பார்க்கக்கூடாது என்பது அவரது கருத்து. பலமொழி இருந்தாலும் நமக்கு அடிப்படையான கலாச்சாரம் இருக்கிறது. வேதம், உபநிடதம் ராமாயணம், மகாபாரதம் என மொழியைத்தாண்டி பொதுவாக புரிந்து கொண்டுள்ளோம். கீதை என்பதை குஜராத் கீதை, தமிழ் கீதை என்றெல்லாம் பிரித்து பேசமுடியுமா என அவர் வினவினார். புத்தரையும், மகாவீரரையும் பிரதேச கடவுளாக்கிவிடமுடியுமா?. இஸ்லாம் மற்றும் அய்ரோப்பியர் கொடைகளையும் நாம் சரியாக புரிந்துகொள்ளவேண்டும். குருநானக், கபீர், துக்காராம் போன்றவர்களையும், ராஜாரம்மோகன்ராய், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர், திலகர், காந்தி உள்ளிட்டவர்களை இந்தியாவின் மகத்தான மனிதர்களாகவே 'வட்டாரங்களுக்கு' அப்பாற்பட்டு புரிந்துகொள்ளவேண்டும் என்றார்.

இந்து மேதைமை என்பது தீவிர மறுமலர்ச்சியை ஏற்காது என்கிற கணிப்பு 50 ஆண்டுகளுக்கு முன்னர் அவரிடம் இருந்தது. ஆனால் அக்கணிப்பு இன்று பொய்த்துபோய்விட்டதே என்கிற கவலையை கொள்ளாமல் இருக்கமுடியாது

விவசாயம் மட்டுமே நாட்டை முன்னேற்றிவிடாது. தொழில்வளர்ச்சி தேவைதான். முதலாளித்துவ முறையிலான தொழில்வளர்ச்சி, கம்யூனிஸ்ட் நாடுகளில் உள்ள அரசு முதலாளித்துவ வளர்ச்சி என்கிற இரு அனுபவம் இருக்கிறது. இரண்டிலும் மக்கள் பாதிக்கப்பட்டே உள்ளனர். காந்தி பேசிய கிராம வளர்ச்சி, தன்னிறைவு கிராமங்கள் என்பது வெறும் விவசாயம் சார்ந்தது மட்டுமல்ல. அங்குள்ள தொழில் சார்ந்ததும்கூட என்றார் கிருபளானி. மையப்படுத்தப்பட்ட முறையில்தான் தொழில் வளர்ச்சி என்கிற மேற்கு

கருத்து நம்மிடம் வலுவாக அமர்ந்துவிட்டதால், பரவலாக்கப்பட்ட தொழில் வளர்ச்சி (decentralised industrial growth) என்பதை நாம் புரிந்து கொள்ள மறுக்கிறோம் என்றார்.

காந்தியின் கழிப்பறையை சுத்தம் செய்யும் தொண்டர் வேலைத்துவங்கி காங்கிரசின் உயர்வேலைகள்வரை 1917-47 ஏறக்குறைய 30 ஆண்டுகள் காந்தியுடனேயே இருந்து பார்த்தவர் கிருபளானி. மீரத் காங்கிரஸ் அமர்வில் (1946) அவர் அதன் தலைவராக இருந்து மிக முக்கிய உரை ஒன்றை தந்தார் . இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு அழுத்தம் கொடுத்தார். காந்தியிடமிருந்து பெற்றுக்கொண்ட அகிம்சையால் நாடு தன்னை உயர்த்திக்கொள்ளும். எவர் வாளை நேசிப்பாரோ அவர் அதனாலேயே மடிவர். காந்தியத்திற்கும் சோசலிசத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடு வழிமுறையின் தூய்மை என்பதிலேயே உள்ளது. குறுகிய வழிகளால் உயர்நோக்கத்தை அடையமுடியாது என்கிற காந்தியம் உலகிற்கு புதியது. உலகம் என்று அதை ஏற்குமோ தெரியாது என்றார்.

மீரத் அமர்வில் அரசியல் அமைப்பு சட்ட அசெம்பிளிக்கு ஜின்னா வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் கிருபளானி. அகிம்சையும் சர்வாதிகாரமும் முரண்படுபவை . நமது அரசியல் ஜனநாயகம் எந்த ஒரு வர்க்கத்தின் , சாதியின் ஆட்சியாக இருக்காது என்றார். அது மக்களால் மக்களுக்கானதாக அமையவேண்டும் . தனிநபருக்கு சுதந்திர செயல்வெளியை மறுத்தால் அரசியல் ஜனநாயகம் கூட சர்வாதிகாரமாக மாறிவிடும் என்கிற எச்சரிக்கையை அவர் தந்தார்.

இஸ்லாமியர் இந்த நாட்டிற்கு வரும்போது இங்குள்ள லட்சக்கணக்கான இந்துக்களைப்பார்த்து அஞ்சவில்லை. ஆனால் நாடு விடுதலைப்பெற்று ஒரே நாடாக இருவரும் வாழலாம் என்றால் ஏன் அச்சப்படவேண்டும் என்கிற வினாவை அவர் தனது தலைமை உரையில் எழுப்பினார். இன்றுள்ள பிரதேச மாநிலங்கள்படி 7 மாநிலங்களில் இந்துக்கள் பெரும்பான்மை என்றால், 5 மாநில பிரதேசங்களில் இஸ்லாமியர்தான் பெரும்பான்மை. இதில் அரசியல் சிறுபான்மை என்கிற எண்ணம் தேவையில்லையே என்றார். இஸ்லாமியர்களை அந்நியர் என பார்க்கும் இந்துமனம் தனது சொந்த மதத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் சேர்த்தே கேடு விளவிக்கிறது என்றார். மதத்தின் பெயரைச் சொல்லி நடக்கும் அரசியல் தவறுகளை அவர் சுட்டிக்காட்ட விமர்சிக்க தயங்கவில்லை.

III

கிருபளானி சுயராஜ்யா, சர்வோதயா, இல்லஸ்ட்ரேடட் வீக்லி, விஸ்வபாரதி போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிவந்தார். 'சர்கா அரசியல்' என்கிற கட்டுரையை

அவர் எழுதினார். சர்வதேச வர்த்தகம், தேசத்தின் தொழில் வளர்ச்சி, கிராமப்புற குடிசைத்தொழில் வளர்ச்சி குறித்து அதில் விவாதித்தார். வலுத்தவனுக்கும் பலவீனமானவனுக்கும் இடையே உள்ள வர்த்தகம் ஒருபோதும் சமத்துவத்தை உருவாக்காது என்றார். குடிசைத்தொழில் சார்ந்த பொருளாதாரம்தான் வேலையின்மையை போக்கும். வறுமையை குறைக்கும். விவசாயிக்கு அனுசரணையான தொழிலாகவும் இருக்கும் என அவர் எழுதினார். காந்திய பொருளாதார கொள்கைகளை முன்னெடுக்கவேண்டிய அவசியத்தை எப்போதும் அவர் வலியுறுத்துபவராக இருந்தார்.

வளர்ச்சி என்பது அமைப்பாவதுதான். அறிவுஜீவிகள்கூட எண்ணங்களின் அமைப்பாளர்கள்தான். இலக்கியவாதிகளும், கலைஞர்களும் கூட அமைப்பாளர்கள்தான். குறைந்த செலவில், சிலமணிநேரத்தில் மக்களை திரட்டும் நடவடிக்கை எதுவோ அதுதான் பயனளிக்கும். நமக்குள்ள பலவீனமே நம்மால் திரளமுடியாமையே. மக்களை ஈடுபடுத்தும் குணம் நமக்கு கைவரவேண்டும் என்றார் கிருபளானி.

மையப்படுத்தப்பட்ட பெருந்தொழில் கலாச்சாரம் மேலிருந்து எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும். ஆனால் நமது குடிசைத்தொழில் கலாச்சாரம் சுய ஆர்வம், பங்களிப்பை மற்றும் ஜனநாயகத்தையும் கூட்டும் என்றார். கிராமத்தில் கிடைத்த வருமானத்தைவிட மில் தொழிலாளி கூடப்பெற்றாலும் அவன் மன உளைச்சலுக்கு ஆளாகிறான். அவனின் இழப்பு கணக்கிடமுடியாத ஒன்று என எழுதும்போது அவர் மார்க்சிய பார்வையான அந்நியமாதல் சிந்தனைக்கு நெருங்கி வருகிறார். கூலி அடிமை (Wage slave) என்கிற மார்க்சிய சொல்லாட்சியையும் அவர் பயன்படுத்துகிறார்.

சர்கா- காதி என காந்தி பேசும்போது அதனை கேலியாக பார்ப்பது சரியானதல்ல என்றார் கிருபளானி. குடிசைத்தொழில் என்பது இயல்பில் சோசலிசத்தன்மையுடைத்தது என எழுதினார். மார்க்ஸ்- எங்கெல்ஸ் பேசிய உபரிமதிப்பு கோட்பாட்டை சுட்டிக்காட்டி 'காட்டேஜ் தொழில்' மற்ற முதலாளிகள் எடுத்து செல்வது போன்ற உபரிமதிப்பை உருவாக்காது என்று பேசினார் கிருபளானி. கிராமத்தொழிலுக்கு தேவைப்படும் கருவிகளை சுலப தவணைகளில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

புரட்சி என்றாலே வர்க்க வெறுப்பு, போராட்டம் என்பதில்தான் உருவாகும்- அமைதியான ஒத்துழைப்பு முறைகளில் வராது என்கிற கருத்தை தான் ஏற்கவில்லை என்றார் கிருபளானி. பரிணாம வளர்ச்சியின் கடைசி அடியாக புரட்சி இருக்கிறது என

அவர் புரட்சி குறித்து விளக்கினார். கொடிய வறுமையும், பட்டினியும் எப்போதுமே புரட்சிக்கான நல்ல கருவிகளாகும் என்பது அனுபவத்தில் சரியாக இருக்கவில்லை என்று எழுதினார் கிருபளானி.

பழமையான ஒன்று என்பதாலேயே புரட்சிக்கு ஒத்துவராது என குடிசைத் தொழில் பற்றி சொல்லப்படுகிறது. அப்போது வன்முறை என்பது காலம் காலமாக இருக்கின்ற பழமையான ஒன்றுதானே என எதிர்கேள்வியை அவர் வைத்தார். சமூக சீர்திருத்தம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைக்குரிய வேறுபாடுகள் கையாளப்படும் நடவடிக்கைளில் இல்லை. அவை வழிமுறைகளிலும், எந்த நோக்கத்திற்காக அவை நடத்தப்படுகிறது என்பதிலும்தான் இருக்கிறது என விளக்கமளித்து காந்தியின் செயல்களில் புரட்சிகர தன்மைகள் இருப்பதாக தனது வாதங்களை அவர் அடுக்கினார். தீண்டாமை குறித்த காந்தியின் போராட்டத்தை 'பெருமாட்டியின் போராட்டம்' என கேலி செய்வது சரியல்ல, அது புரட்சிகரபோராட்டம் என எழுதினார் கிருபளானி.

மார்க்சிய பொருள்முதல்வாதம் என்பதிலிருந்து அவர் மாறுபட்டு பேசினார். மார்க்சிய பொருள்முதல்வாதம் அறிவியல் அடிப்படையில் என உரிமை கோரினாலும் அங்கு நெறிகளுக்கு இடமிருப்பதில்லை. வழிமுறைகள் பற்றி அது கவலைகொள்வதில்லை. வழிகளை குறித்து எந்த நெறிகோட்பாடுகளையும் வைத்துக்கொள்ளவில்லை என்றார். சோவியத்தில் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் பற்றி தனது கடும் விமர்சனங்களை கிருபளானி முன்வைத்தார். லெனினை புதிய கடவுள் ஆக்குகிறார்கள் என்றார். அவர் உடல் பாதுகாக்கப்பட்டு வந்ததை பற்றி விமர்சித்தார். எழுந்துவரும் தேசிய விடுதலை இயக்கங்களையெல்லாம் பூர்ஷ்வா இயக்கம் என்று முத்திரையிடுவதும் தலைவர்களை விமர்சிக்கும் முறையையும் அவர் ஏற்கவில்லை. ருஷ்யாவை கண்டனம் செய்வதற்காக தான் எதிர்வினையாற்றவில்லை என்றும் அதன் கொள்கை குறித்த விமர்சனபார்வையே அவை என்றும் எழுதியிருந்தார் .

வெற்றி அனைத்தையும் தீர்மானிக்கும் என்பதையும் வலிமை என்கிற முரட்டுத்தனத்தால் சாதித்துவிடலாம் என்பதிலும் அவர் உடன்படவில்லை. அப்படியொரு பார்வை நோக்கி நகரும் மானுட நடத்தை குறித்து தனது கவலையை வெளியிட்டவர் கிருபளானி.

உண்மை என்பது கடைபிடிக்கப்படவில்லையெனில் பின் அன்போ, விசுவாசம் என்பதற்கு அர்த்தம் இருக்காது. இறைவனின் பெயரால் வெளிப்பட்ட மதவெறித்தனமோ, பாட்டாளிகளின் பெயரால் கம்யூனிச வெறித்தனமோ எதிர்விளைவுகளை உருவாக்கும். பாசிசம்கூட இப்படிப்பட்ட எதிர்விளவுதான் என

அவர் பேசினார். சோதனைகளுக்காக அறிவியல் கூடத்தில் அனுசரிக்கப்படும் உகந்த சூழல் என்பது சமூக கூடத்தில் கிடைக்காது. எனவே விஞ்ஞான விதிகள் போன்ற அறுதியிட்டு சொல்லப்படும் விதிகள் சமூக விஞ்ஞானம் என்பதற்கு இருப்பதில்லை என சமுக விஞ்ஞானம் குறித்த தனது பார்வையை கிருபளானி முன்வைத்தார். சமுக மனித நடத்தை பரிசோதனைகள் அறிவியல்கூட பரிசோதனைகளை ஒத்ததல்ல என்றார்.

புரட்சிக்காக நின்ற பல தலைவர்கள் சோவியத்தில் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு ஒழிக்கப்பட்டுவந்ததை அவர் சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பினார்.. ருஷ்யாவில் பொருளாதார சோசலிசம் வந்திருக்கலாம். ஆனால் அரசியல் ஜனநாயகத்தை மிதித்து அது வெளித்தெரிகிறது. அரசு உதிர்ந்துவிடும் என்று மார்க்சியம் பேசும்போது 'சுய ஒழுங்கு கொண்ட உயர் வளர்ச்சியடைந்த தனிநபர்களின் சமுக இருப்பு' என்பதையே குறிப்பாக தருகிறது. ஆனால் நடைமுறையிலோ சோவியத் மிகு அதிகாரம் கொண்ட அரசைத்தான் கட்டிவருகிறது என விமர்சித்தார் கிருபளானி. பொருளாதார பலன்கள் என்கிற பெயரில் அரசியல், கலாச்சார, ஆன்மீக பின்னடைவுகளை கம்யூனிசம் தருகிறது என்ற கடுமையான தாக்குதலையும் அவர் சோவியத் அனுபவத்திலிருந்து முன்வைத்தார்.

சுரண்டல், அநீதி, லாபவேட்டை கொண்டுள்ளதால் முதலாளித்துவத்தை நாம் விமர்சிக்கிறோம். அகற்றப்படவேண்டும் என கருதுகிறோம். காந்தியை பொறுத்தவரை அவர் எந்த கொள்கைக்கும் (தான் பேசுவது உட்பட) தன்னை அடிமையாக்கிக்கொள்ளவில்லை. அரசிற்கு அதிக அதிகாரம் என்பதை கண்டு அவர் அஞ்சினார். அதிகாரம் குவிந்த அரசு எந்திரம் ஆன்மா இல்லாதது என காந்தி சுட்டிக்காட்டினார். காந்தி எந்திரங்களை எதிர்க்கிறார் என்கிற விமர்சனத்திற்கு கிருபளானி விளக்கம் தந்தார்.. *காந்திஜி எந்திரங்கள் மீதான கவர்ச்சியை விமர்சித்தார். உயிருள்ள மனித உழைப்பிற்கு எதிராக உள்ளுறைந்த செத்த ஒழிப்பின் வடிவமாக நிற்கும் எந்திரங்களை வைப்பதைத்தான் காந்தி விமர்சித்தார் என்றார்* .

அரசு ஜனநாயகரீதியாக செயல்படவேண்டுமெனில் பன்மைத்துவ தன்மை கொண்டிருக்கவேண்டும் என விழைந்தார் கிருபளானி . அவர் சொல்லும் அரசில் முதலாளிகளும் தொழிலாளர்களும் எப்படிப்பட்ட பன்முகத்தன்மையை வெளிப்படுத்தமுடியும் என அவர் விளக்கவில்லை.

மையப்படுத்தப்பட்ட அதிகாரமும் ஜனநாயகமும் ஒத்துப்போகாது என்றார் கிருபளானி. குவிஅதிகாரம் எனில் ஜனநாயகமில்லை (More of Centralism means less of democaracy). என்றார். ஜனநாயக மத்தியத்துவம் (democaratic centralism) என்பதையும் அவர் சரி என ஏற்கவில்லை - வார்த்தை விளையாட்டே என்றார். பொருளாதார பரவலாக்கம் (decentralization) இல்லாமல் அரசியல் பரவலாக்கம் இருக்காது என்றார்.

IV

வர்க்க சங்கார்ஷ் (varga sangarsh) என்கிற வர்க்கப்போராட்டம் பற்றி பிரஜா சோசலிஸ்ட் தொண்டர்களுக்கு விளக்கம் அளிக்க கிருபளானி தனி கட்டுரை ஒன்றை எழுதினார். மார்க்சிய முழக்கங்கள் குறித்து அதில் அவர் விவாதித்தார். மார்க்சிய தத்துவம் புரிந்து கொள்ளப்படுவதை சுருக்கமாக அவர் 9 அம்சங்களில் எடுத்து சொல்கிறார்..

1. சமுகவியலும் வரலாறும் பிற விஞ்ஞானங்களைப்போலவே தவிர்க்கமுடியாத விதிகளை கொண்டவை

2. வரலாற்றிலும், சமுகத்திலும் அடிப்படை இயங்குவிதி பொருளாதாரம்

3. மனித வரலாறே பொருதிக்கொள்ளும் இருவேறு வர்க்கங்களின் போராட்டமே. தற்போது முதலாளித்துவ- தொழிலாளி வர்க்கப் போராட்ட கட்டம்.

4. பல தொழில்மய நாடுகளில் இருதுருவ வளர்ச்சி வந்துவிட்டது. பிற நாடுகள் அதை நோக்கி போகின்றன.

5. திரளான தொழிலாளர்களின் மோசமடைந்துவரும் வாழ்க்கை நெருக்கடிகள் வர்க்கப்போராட்டம் நோக்கி நகர்த்துகின்றன.

6. திரட்டப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக பாட்டாளிகளுக்கு சாதகமாக இப்போராட்டம் முடியவேண்டும்.

7. இந்த வன்முறை போராட்ட நிகழ்ச்சிப்போக்கில் போராட்ட வெற்றியை உறுதிப்படுத்திட, புதிய வகைப்பட்ட வர்க்கமற்ற சமுகம் அமைந்திட பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் அவசியம்.

8. இவ்வழி அமைந்த பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் வர்க்கங்களே இல்லாத சமுகத்தை மட்டுமல்லாமல் அரசே உதிர்ந்துபோகும் நிலையை உருவாக்கும்.

9. எந்த நாட்டில் புரட்சி வெற்றி பெற்றாலும் அதற்கு உலகளாவிய முக்கியத்துவம் விரிவு இருக்கிறது. உலகம் முழுதும் மூலதன நலன்கள் ஒன்றாகவே இருக்கிறது. அதேபோல் பாட்டாளிகளின் நலன்களும் உலக அளவில் ஒன்றாகவே இருக்கிறது.

இவற்றை கிருபளானி மனோதத்துவகைப்பட்ட ஊகங்கள் (metaphysical speculations) என்றே சொல்லமுடியும் என்றார். மார்க்சிற்கு முன்பே பல அறிஞர்கள் முதலாளித்துவ கொடுமைகளை பேசியுள்ளனர். மார்க்ஸ் விவரங்களை எடுத்துக்கொண்ட ராயல் கமிஷன் பல கொடுமைகளை சித்தரித்தது. ஆனால் இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்று சொல்லவில்லை. முதலாளித்துவ உற்பத்திமுறை தந்த பொதுவான அனுபவங்களை அது பேசியது.

விஞ்ஞானத்திற்கும் சமுக விஞ்ஞானத்திற்குமான வேறுபாடுகளை அவர் விளக்கினார். சமூக ஆய்வுகளில் விஞ்ஞான ஆய்வைப்போன்று நியூட்ரல் ஆக ஒருவர் செயல்படமுடிவதில்லை. ஆய்வாளர் செயற்பாட்டாளராகவும் இருக்கிறார். விருப்பு வெறுப்புகளை புறம் தள்ளிய ஆய்வுமுறைக்கு அங்கு வாய்ப்பில்லை. சமுக விஞ்ஞானம் மனிதகுலத்தின் காலம்காலமான நினவுகளுடன் ஊடாடவேண்டியுள்ளது. பழக்க வழக்கம், மூடநம்பிக்கைகள், நினைவிற்கு அப்பாற்பட்ட தொடரும் நம்பிக்கைகள் என.. இவற்றை விஞ்ஞான முறைகளால் அளந்துவிடமுடியாது. பெளதீக, உயிரியல், அரசியல், பொருளாதாரம், மதம் என மனித வாழ்க்கையை ஒற்றை காரணத்திற்குள் சுருக்கிவிடமுடியாது. பின்னர் அது பொருளாயத உள்ளுணர்வு (Material mysticism) என்றாகிவிடும். அந்த இறுதி காரணத்தை தேடுவதாக அமைந்துவிடும் என்று தனது விளக்கமாக கிருபளானி எழுதினார்.

மார்க்சின் உழைப்பு மதிப்பு கோட்பாடு (Labour Theory of Value) குறித்து கிருபளானி விவாதிக்கிறார். பெளதிகம், கணிதம் போல் பொருளாதாரத்தை விஞ்ஞானமாக கார்ல் மார்க்ஸ் பார்த்ததாக சொல்கிறார். ரிகார்டோதான் மதிப்பின் விதி ( foot rule of value ) பற்றி சொல்கிறார். உற்பத்திக்கு ஈடுபடும் பயன் உழைப்பின் நேரம் பொறுத்து பண்டம் அளவிடப்படுகிறது ( An article is measured by the hours of useful labour needed in its production- socially useful labour) என ரிக்கார்டோ கூறினார். இது இறுதியில் சந்தை விலையில் தொழிலாளரை பெறுவது என்றானது. அது நிரந்தர விலைக்குரியதாகவோ, முற்று முழுதான ஒன்றாகவோ இருக்காது. சரக்குகளின் விலையைப்போல தொழிலாளர் விலையும் போட்டிக்குரியதாக இருக்கிறது என்றார் கிருபளானி.

போட்டி சூழலில் 'பிழைப்பு ஊதியத்திற்கு' தங்களுக்கு மலிவாக தொழிலாளர்கள் வேண்டும் என 'மதிப்பு விதியின்படி' முதலாளித்துவம் நினைக்கிறது. ஆனால்

மார்க்சின் கொள்கைப்படி தொழிலாளி தான் பெறும் பிழைப்பு ஊதியத்திற்கு மட்டும் உழைக்கவில்லை. உபரி உழைப்பை தருகிறார். அதை வைத்துதான் பிற செலவுகளை முதலாளி செய்யமுடிகிறது. அவரிடம் கருவிகள் இருப்பதால்- நிலம்- எந்திரம் மற்றும் ஆலை உடைமையாக இருப்பதால் உபரியை அவரால் அபகரிக்கமுடிகிறது. பாட்டாளிகளின் உழைப்பினால்தான் முதலாளிகளுக்கு இலாபம் உபரி மதிப்பு கிடைக்கிறது. இந்த பொருளாதாரமுறை முரண்பாடுகளை உருவாக்கி வர்க்க மோதலுக்கு இட்டு செல்லும் என்றார் மார்க்ஸ். முதலாளிகள் தாங்களாக விட்டுத் தரமாட்டார்கள்- புரட்சியை சட்டரீதியாக அமைதியான வழிகளில் கொணரமுடியாது என்பது மார்க்சின் கருத்தாக இருந்தது.

மார்க்சிடமிருந்து தான் மாறுபடுவதை கிருபளானி விளக்குகிறார். மூலதனம் வளர்ச்சிக்கு தேவை, தொழிலாளர் அனைத்தையும் சம்பளமாக பெற்று செல்லமுடியாது. சேமிப்பு என்பதை புதிய உற்பத்திக்கு எடுத்து சென்றிடவேண்டும். முதலாளிகள் கூட அத்தனை உபரியையும் எடுத்து செல்லமுடியாது உற்பத்திக்கு முதலிட்டாக வேண்டும் என்றார் கிருபளானி. எல்லா காலத்திற்கும் பொருந்தக்கூடிய பொதுவிதிகள் என வகைப்படுத்துவது ஆபத்தானது என தாம் கருதுவதாக எதிர்வினையை கிருபளானி தந்தார்.

கிருபளானியை பொறுத்தவரை தொழிற்சங்கத்தின் அடிப்படியான நோக்கம் பொருளாதரா பலன்களை மேம்படுத்துவது என்பதுதான் . நேரடி அரசியல் புரட்சிக்கானதல்ல தொழிற்சங்கம் என்பதில் அவர் உறுதியாக நின்றார்.. உறுப்பினர்களை திரட்டி தனது கூட்டுபேரவலிமையை தொழிற்சங்கம் நிறுவவேண்டும். அங்கு மூலதனமும் உழைப்பும் பகைமை பாராட்டிக்கொள்ளாமல் அமைதி இயக்கமாக இருக்கவேண்டும் என்றார். அவர் காந்திய பார்வையைத்தான் இங்கும் முன்வைக்கிறார். ஜனநாயக நடைமுறையும் தொழிலாளர் இயக்கம் வளர உதவியுள்ளது. அவர்களின் பலமான வாக்குரிமை முக்கிய காரணியாகியுள்ளது என்றார் கிருபளானி. தொழிற்சங்க வாதமும் ஜனநாயகமும் (Trade Unionism and Democracy) என்கிற பெரும் வளர்ச்சி மார்க்ஸ் காலத்திற்கு பின் நாம் காண்பது என்கிறார் கிருபளானி.

கம்யூனிஸ்ட்கள் தொழிற்சங்கங்களை அவை பொருளாதார மேம்பாடு என்பதுடன் சுருக்கிக்கொண்டால் விமர்சிக்கிறார்கள். பொருளாதாரவாதம்-புரட்சிகரமானதல்ல என அவர்கள் கருதுகிறார்கள். வர்க்கப்போராட்டத்தை அது ஒத்தி வைப்பதாக கருதுகிறார்கள். தொழிற்சங்கம் என்பது முதலாளித்துவம் வீழ்த்தப்படுவதற்கான புரட்சிகர கருவியாக வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். பொருதிக்கொள்ளும் இரு

படைப்பிரிவுகளாக மூலதனம், உழைப்பாளர்களை அவர்கள் பார்க்கிறார்கள். அங்கு ஒத்துழைப்பு, சமரசம், புரிந்து இசைதல் என்பதெல்லாம் மோசமானது எனவும் கருதுகிறார்கள். இறுதி புரட்சிகர யுத்தத்திற்கு தொழிற்சங்கம் பயிற்சிக்கூடம் என்பது அவர்கள் பார்வை என கிருபளானி தொண்டர்களுக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

மார்க்சியத்தின் பெயரால் நிறுவப்பட்டுள்ள போல்ஷ்விக் ஆட்சி நடைமுறையில் பல்வேறு சமரசங்களை செய்யவேண்டியிருந்தது. பூர்ஷ்வா நிறுவன முறைகள் பலவற்றை ஏற்றது. சமாதான சகவாழ்வு என பேசவேண்டியதானது. உலக புரட்சி என்பதை அது கைவிட்டதாகவே தெரிகிறது. கட்டளைகள் மூலம் புரட்சி சாத்தியமல்ல என்றும் பேசவேண்டியதாயிற்று. அதே நேரத்தில் உலகின் பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு அது ஊக்கம் தராமல் இல்லை என சோவியத் அதன் நடைமுறைகள் உணர்த்திய அனுபவத்தை கிருபளானி முன்வைத்தார்.

சத்யாகிரகி என்பவருக்கு தனிநபர், சமுக மேம்பாடு என்கிற அம்சத்தில் வெறுப்பு, வன்முறை வழியாக இருப்பதில்லை. அப்படியொன்றும் மேம்படுத்தவே முடியாத வர்க்கம், தனிநபர் என சத்யாகிரகி எந்த வர்க்கத்தையும் எவரையும் கருதவில்லை என்கிற காந்திய பார்வையை கிருபளானி முன்வைத்தார்.

அய்ரோப்பா நாடுகளின் முக்கிய சில புரட்சிகள் பற்றி கிருபளானி பேசினார். தொழிற்புரட்சிக்கு முன்னர் மார்க்சிய பொருளில் வர்க்கம் என்பதை எவரும் அறியவில்லை. இங்கிலாந்து, அமெரிக்க பிரஞ்சு புரட்சிகள் சட்டத்தின்படியான ஆட்சி என்பதற்கு நின்றன.

ருஷ்ய புரட்சி எப்படிப்பட்டது. ஜாரின் கொடுமை எதிர்த்து ஒடுக்கப்பட்ட மக்களின் கிளர்ச்சியது. அங்கு முதலாளித்துவ வர்க்கம் நேரிடையாக வறுமைக்கும் துன்பத்திற்கும் காரணமாகும் அளவு வலுவாகிடவில்லை. யுத்தக்களைப்பும் அதனால் தொடர்ந்த துன்பங்களும் மக்களை வாட்டின. ஜார் குடும்பம் படுகொலைக்கு உள்ளானது. ஆட்சிக்கு வந்த கெரன்ஸ்கி சர்க்கார் என்பது பாட்டாளிவர்க்க சர்வாதிகார ஆட்சியல்ல. தாராளவாத ஜனநாயக ஆட்சி. டூமா மூலம் அரசியல் அமைப்பு சட்டம் கொணர அந்த ஆட்சி முயற்சித்தது. மிக பலவீனமான அரசாக இருந்தது. போர் நிறுத்தம் உள்ளிட்டு மக்கள் பாதிப்புகளை அகற்ற முடியாத அரசாக இருந்தது. போல்ஷ்விக் கட்சியின் தலைமையில் அரசியல் இராணுவகலகம் மூலம் அந்த அரசு அகற்றப்பட்டது. வர்க்கப்போராட்டம் என்பதன் மூலமல்ல என்பதே தன் புரிதல்

என்றார் கிருபளானி. இதையெல்லாம் அவர் தன் காலத்திலேயே புரிந்துகொள்ளும் ஆற்றலுடன் இருந்துள்ளார் என்பது சிந்திக்கவேண்டிய அம்சமாக இருக்கிறது.

லெனின் தலைமையில் பாட்டாளிகள் பெயரில் போல்ஷ்விக் கட்சியின் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. ஸ்டாலின் லெனினைப்போலவே திறமையாக அதைத்தொடர்ந்தார். அவர்கள் இராணுவக்கலை அறிந்தவர்கள். அங்கு சொல்லப்பட்ட சோசலிச ஆட்சி, கம்யூனிச ஆட்சி, மக்கள் ஜனநாயக ஆட்சி என்பதெல்லாம் வார்த்தைகள்தான். தனியார் முதலாளித்துவம் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டு அவ்விடத்தில் அரசு முதலாளித்துவம் நிறுவப்பட்டது. உண்மையில் ஒருவகை ராணுவ ஆட்சிதான் அங்கு நடந்தது. ஸ்டாலின் மறைவிற்கு பின்னர் ஏக சர்வாதிகாரம் முடிவுற்று குழு சர்வாதிகாரம் ஏற்பட்டது என சோவியத்புரட்சி- அதிகாரம் பற்றிய தனது விமர்சன பார்வையை கிருபளானி முன்வைத்தார். இன்று பார்க்கையில் கிருபளானி பல துல்லிய மதிப்பீடுகளை தன் காலத்திலேயே பெற்றுள்ளார் என்பது ஆச்சர்யமளிக்கிறது.

ஜனநாயகம் மூலம் அரசாங்கம் என்கிற நம்பிக்கையை அவர் தொடர்ந்து வெளிப்படுத்தினார். பரவலான மக்கள் கருத்தை உருவாக்கி ஜனநாயகம் மூலம் 'அரசாங்கத்தின் குணத்தை' தீவிரமாக மாற்ற இயலும் என நம்பினர் கிருபளானி. வாக்குகள் பெற்று ஆட்சிக்கு வருவதை நாம் புரட்சி என ஏற்பதில்லை. வாக்கு மூலம் நம்மால் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் தீவிர மாற்றத்தை உருவாக்க முடிந்தால் அதுவும் புரட்சிதான் என்றார் கிருபளானி. ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து செயல்படும் அரசியல் கட்சிகள் தங்களுக்கு எவ்வளவு அசௌகரியம் நேர்ந்தாலும் 'வகுப்புவாதம் - சாதியம் - வட்டாரவாதம்' எதிர்த்து தொடர்ந்து போரிட்டு அவற்றின் தீவிரத்தை குறைத்தால் மாற்றங்களை கண்டு நாடு உயரும் என நம்பினார் கிருபளானி.

சொத்து என்றால் என்ன என ஒரு கட்டுரையை அவர் எழுதியிருந்தார். அனைத்து உற்பத்தியும் சமூக வயப்பட்டது. அந்த இணைப்பு சங்கிலியில் தனிநபர் இடம் பெறுகிறார். உற்பத்தி விநியோகம் என்பவை சமூகத்தன்மை கொண்டவை என்கிற புரிதல் இல்லாவிட்டால் இரத்தக்களறிக்கான வழி ஏற்படும்.. கிருபளானியை பொறுத்தவரை புரட்சி என்பது அடிப்படையில் ஆன்ம இயக்கம் . அது சமுக சக்திகளால், பொருளாயத சக்திகளால் கொணரப்பட்டிருக்கலாம்.

எளிமை, சிக்கனம் என்பது அரசியல்வாதிகளுக்கு இருக்கவேண்டிய அவசிய குணங்களாக கிருபளானி தொடர்ந்து பேசிவந்தார். கோடிக்கணக்கான மக்கள்

ஏழ்மையில் இருக்கும்போது இக்குணங்களை கடைப்பிடிக்கவேண்டியது அவசியம் எனக் கருதினார். நமது குடியரசு தலைவரும், கவர்னர்களும் எளிய ஆடைகள் அணிவதுதான் உகந்தது - வெளிப்பகட்டு அவசியமில்லை என்றார். கண்ணியம் என்பது வெளித்தெரிவதில் இருப்பதில்லை. அது உள்ளொளி பண்பாட்டின் வெளிப்பாடே (Dignity is the result more of inner culture) என்றார் கிருபளானி. காந்தியிடம் நாம் கற்றுக்கொண்ட எளிமையை விடலாகாது என்பது அவரது வாதமாக இருந்தது.

நட்பு மேற்கொள்வது என்பதற்கு ராஜாஜி தந்த விளக்கத்தை கிருபளானி மேற்கோளாக தந்தார். சிரித்து மகிழ்வது மட்டுமல்ல நட்பு. அவ்வப்போது மேற்கொள்ளும் ஆக்கபூர்வ விமர்சனமும் நட்பின் வெளிப்பாடாக இருக்கவேண்டும் என்பது ராஜாஜி அவர்களின் புரிதல். தங்களை ஆள்பவர்கள் மீது நம்பிக்கை இருக்கும்வரைத்தான் தாங்களே முன்வந்து மக்கள் ஒத்துழைப்பை நல்குவர். சந்தேகம் வந்துவிட்டால், ஆள்பவர்கள் தங்கள் நம்பிக்கையை பொய்த்துவிட்டார்கள் என்பது வலுப்பெற்றால் அவர்களால் மனம் விரும்பிய ஒத்துழைப்பை தர இயலாமல் போகும் என்றார் கிருபளானி.

அதிகாரம் என்பதற்கான குறைகளை, அதன் எதிர்மறை குணங்களை காந்தி அறிந்தவர். ஆனால் அரசியல் என்பதிலிருந்து விலகவும் முடியாது என்பதால் தனது அரசியல் என்பதை அவர் வழிமுறையாக, விடுதலைக்கும், மனிதர்களின் சமதையான வாழ்க்கை முறைக்குமான வழியாக கொண்டார். அவர் காலத்து அரசியல் என்பது தியாகமும் சித்திரவதைகளை அனுபவிப்பதுமாக இருந்தது. அதிலும் அவர் மிக கவனமாக உண்மை- அகிம்சை முறைகளை கைக்கொண்டார். இன்று எங்கு திரும்பினும் அரசாங்கம் நிற்கிறது. மக்களின் பிரச்சனையை காங்கிரஸ் தீர்த்தால் அது அதிகாரத்தில் நிலைக்கும். இல்லையெனில் சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட்கள் என வந்து தீர்த்தால் அவர்கள் அதிகாரத்தில் இருப்பர். காந்தி மனித இயல்பின்மீது அவநம்பிக்கை கொண்டவராக இல்லை. அவர்கள் செய்திறன் மீது அவர் வரையறைகளை நிர்ணயிக்கவில்லை. அளப்பரியது என்கிற உளவியல் அவரிடம் செயல்பட்டது என்கிறார் கிருபளானி.

ஜனநாயகம் என்பதை பெரும்பான்மை என்பதுடன் மட்டும் அவர் நிறுத்தவில்லை. அதற்கு காரணகாரிய செயல் என்கிற மதிப்பை கிருபளானி கூட்டினார். பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்பதுகூட அறியாமையுடன் இருந்துவிடக்கூடாது. அதற்கு சிறந்த நேர்மையான வழிகாட்டல் தேவைப்படலாம் என்பதை (Some of us conceive democarcy to be the will of the majority and this will needs no guidance. Is the will of the majority always well informed? Does the majority need no guidance from

wise, well informed and united leadership) அவர் வலியுறுத்தி வந்தார். பெரும்பான்மை விருப்பம் என்பதுடன் நிற்காமல் சிறந்த கருத்துக்களின் துணையுடன் பெரும்பான்மை என்பதை அவர் இணக்கப்படுத்தி ஜனநாயகத்தை மேம்படுத்திட விழைந்தார்.

இதற்கு உதாரணமாக பெரும் அரசியல் சர்ச்சையாக மாறி நிற்கும் பசுகொலை தடை என்பதைப்பற்றி அவர் பேசுகிறார். காந்தி இதை தவறான கோரிக்கை என விளக்கியதை கிருபளானி அதில் எடுத்து உரைத்தார். பசுகாப்பு என்பதை எதிர்மறையாக அணுகுகிறார்கள் என்ற கவலை காந்திக்கு இருந்தது என்றார் கிருபளானி. பெரும்பான்மை உறுதி விருப்பம் என்பதுடன் சரியான காரணம் கொண்ட விருப்பம் என்பதாகவே ஜனநாயகத்தை புரிந்துகொள்ள வேண்டும் (Democarcy is not only will of majority but with right reason) என்கிற நல்ல வரையறையை கிருபளானி தனது அனுபவத்திலிருந்து நாட்டிற்கு தந்தார்.

இந்து திருமண சட்டம், மொழிக்கொள்கை, மாணவர்களும் அரசியலும், அரசியல் கட்சிகள், நான் ஏன் காங்கிரசிலிருந்து வெளியேறினேன், அரசியலில் மறைபொருள்வாதம், விமர்சன பயம், நாட்டுப்பிரிவினைக்கு பலியானவர்கள் போன்ற பல கட்டுரைகளை கிருபளானி எழுதினார். காந்தி குறித்த ஏராளமாக எழுதியவர் கிருபளானி.

1951 கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி (KMP) துவங்கி பின்னர் பிரஜா சோசலிஸ்ட்களுடன் இணைந்தார். பின்னர் அதிலிருந்தும் 1954ல் வெளியேறினார். நாடாளுமன்றத்தில் தனது ஆழமான உரைகளால் விவாதங்களை வளப்படுத்தினார். இந்திரா அம்மையார் கால எமர்ஜென்சியின் போது அதனை எதிர்த்து காந்தி ஜெயந்தி அன்று போராடியதால் கைது செய்யப்பட்டார். ஜேபியின் இயக்கத்திற்கு ஆதரவாக இருந்தார். அவரது துணைவியார் சுசேதா கிருபாளனி இந்தியாவில் உத்தர பிரதேச முதல் 'பெண் முதலமைச்சராக' 1963ல் இருந்தவர். அவர் தன் அளவில் பெருமைக்குரிய வரலாற்று பின்னணி கொண்டிருந்தார். வெள்ளையனே வெளியேறு போராட்ட நாயகிகளுள் சுசேதா ஒருவர். ஆகஸ்ட் 1947 விடுதலை பிரகடன நள்ளிரவில் நேருவின் உரையை உலகம் கேட்டதுபோல் அன்று வந்தேமாதரம், ஜாரே ஜகான்சே அச்சா, ஜனகனமன பாடல்களை சுசேதா பாடிட உலகம் கேட்டது.

ஆச்சார்யா கிருபளானி அவர்கள் தனது 93ஆம் வயதில் அகமதாபாதில் இயற்கை எய்தினார். தனது வாழ்க்கை அனுபவங்களை 'எனது காலம்' என அவர் பதிவு செய்திருக்கிறார். மனிதர்கள் தங்களுக்குள் ஏற்படும் சிறுவேறுபாடுகளை மாபெரும் கொள்கை பூசல் அளவிற்கு உயர்த்தாமல் இருப்போம். தனிப்பட்ட தொடர்புகள் தேவை.

எப்போதுமே மனிதர்கள் கொள்கைகளைவிட சிறந்தவர்கள், தேவைப்படுபவர்கள். சமுக உறவுகளில் நம் இவற்றை புரிந்து கொள்ளமுடியும் என்றார் அவர். அருகில் அமர்ந்து விவாதிப்பவர்களுடன் அவர் நகைச்சுவை ததும்ப பேசுவார். தன்னை கேலி செய்துகொள்வார். தன் சிறுமண்டையை மறைக்கத்தான் நீண்ட முடி வளர்ந்துள்ளது என்பார். காந்திய சிந்தனைகள் குறித்து ஓயாமல் எழுதி வந்தவர் அவர்.

Ref:

**Acharya Kripalani - GS Bhargava**

**Kripalani and His Ideas - J S Bright**

**J B Kripalanai- His vision and Ideas- Verinder Grover**

ஜூன் 2017

கிருபளானியின் காலம்

பெரியவர் ஜே பி கிருபளானி தன் சுயசரிதை என்ற பெயரில் பெரும் அரசியல் ஆவணத்தை 1000 பக்கங்களில் எழுதியுள்ளார். My Times An AutoBiography of J B Kripalani என பெயரிடப்பட்ட புத்தகமது. அவரின் சுயசரிதை என்பது மரியாதைக்கு கூட அதில் பெரிதாக தென்படாது. அவர் கண்ணால் கண்ட மனதால் அனுபவித்த விடுதலைப்போராட்டக் கால நகர்வுகள் பெரும்பாலான பக்கங்களை எடுத்துக்கொண்டுள்ளன. இறுதி 200 பக்கங்கள் விடுதலைக்கு பின்னரான நேரு காலத்தை, கிருபளானி போராட்டங்களைக் காட்டுகின்றன. இந்திரா ஆட்சிக்கு வருதல், எமர்ஜென்சி வரை ஓரளவிற்கு அந்த புத்தகத்தில் பேசப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகம் விடுதலைக்கால காங்கிரஸ் இயக்கத்தின் அதிகாரப்பூர்வமற்ற சரித்திரமாகவும் இருக்கிறது. காங்கிரசிலிருந்து வெளியேறியவர்களின் பதிவுகளும் வரலாற்றை அறிந்துகொண்டு புரிதலை நேர் செய்திட உதவும் என்ற நம்பிக்கை உள்ளவர்க்கு கிருபளானியின் இந்த பெரிய நூல் உதவும் என்பதில் சந்தேகமில்லை. இந்த கட்டுரை எனது இந்த நூல் குறித்த முகநூல் இடுகைகளின் (ஆக-செப் 2022) தொகுப்புத்தான். சிறிய அளவிற்கு அதை நேர்படுத்தி கட்டுரையாக தந்துள்ளேன். இனி கிருபளானி எழுதியதை மிக சுருக்கமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடுகைகள் வழி பார்க்கலாம்.

II

கிருபளானி காந்தியை முதன் முதலில் சாந்திநிகேதனில்தான் சந்திக்கிறார். பலருக்கும் நேர்ந்ததுபோலவே கிருபளானிக்கும் அந்த முதல் சந்திப்பு பெரும் ஈர்ப்பைத் தரவில்லை.

கிருபளானியும் காககலேல்கரும் பம்பாய் வில்சன் கல்லூரி தோழர்கள். கலேல்கர் அப்போது பிரம்மச்சாரி தத்தரேயர் என அறியப்பட்டவர். அவர் சாந்திநிகேதனில் இருந்தார். அப்போது கிருபளானி முசபர்பூர் கல்லூரி ஒன்றில் வரலாற்று பேராசிரியர். காந்தி சாந்திநிகேதன் வரும் செய்தியை கலேல்கர் அனுப்பிடவே காந்தியைப் பார்க்க கிருபளானி கல்கத்தா வருகிறார்.

இருவரும் ஒருவரை ஒருவர் அளந்துகொள்கின்றனர். காலை நடைப்பயிற்சியில் அகிம்சை குறித்து விவாதம் வருகிறது. அப்போதுதான் 1915ல் காந்தி இந்தியா திரும்பிய நேரம். இன்னும் மகாத்மாவாக உணரப்படவில்லை. மிஸ்டர் காந்தியாகவே அழைக்கப்பட்ட நேரம்.

அற்புத தெறிப்பு ஒன்று காந்தியிடம் வந்ததை கிருபளானி பதிவிடுகிறார். இதுவரை ஒன்று நடக்கவில்லை வெற்றியைக் கண்டதில்லை என்பதால் இனி நடவாது என்பதாகாது என்ற சாரத்தில் காந்தியின் மறுமொழி வந்தது. வரலாறு தனது இறுதி வார்த்தை யை எழுதிக்கொள்ளவில்லை **History had not written its last word yet** என்றார் காந்தி.

இதற்கு பேரா. கிருபளானி தன்னிடம் பதில் இல்லாததை உணர்ந்தார்.ஆனாலும் இந்த ஒரு வார காலத்தில் பின்னொரு காலத்தில் மிக முக்கிய காந்திய ஆளுமையாக போகிறவர்தான் அவர் என்பதை கிருபளானி அன்று உணரவில்லை. காந்தியால் தன்னை மாற்றமுடியவில்லை என்ற உணர்வுடனே கிருபளானி திரும்பினார்.

மாளவியா அவர்கள் டெல்லி காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக 1918ல் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உதவிக்கு ஒரு இளைஞர் இருந்தால் நல்லது என காந்திக்கு அவர் செய்தி அனுப்புகிறார். காந்தியும் கிருபளானியிடம் அலகாபாத் சென்று மாளவியாவிற்கு உதவ வேண்டுகிறார். இசைந்த கிருபளானி மாளவியா மாளிகைக்கு செல்கிறார்.

டெல்லி மாநாட்டிற்கு மாளவியா தலைமையுரை எழுதவேண்டும். இருவரும் விவாதிக்கிறார்கள். கிருபளானி எழுதி காட்டுவதையெல்லாம் மாளவியா அடித்து திருத்தி மாற்றித் தருவார். திருப்தி அவருக்கு ஏற்படவில்லை. மிகச் சரியாக எதையும் செய்ய விரும்பும் **perfectionist** ஆக மாளவியா கிருபளானிக்கு தென்பட்டார். மாநாடு நெருங்கியும்விட்டது. எப்படியோ மாளவியா மனத்திருப்திக்கு உரையும் தயாராகிவிட்டது.

அலகாபாதில் மாளவியா மகன்களுடன் உரையாட ஓர் இளைஞர் வருவார். கல்லூரி முடித்துவிட்டாரா படித்துக்கொண்டிருக்கிறாரா என ஊகிக்கமுடியாத அளவு குறும்பு கொப்பளிக்கும் விளையாட்டுத்தனத்துடன் அந்த இளைஞர் தென்பட்டார். அந்த இளைஞர் எப்போதும் மன்சார் அலி சோக்தா என்கிற தோழனுடன் தான் வருவார். அவர் வேறு யாருமல்ல , ஜவஹர்லால்தான். இப்படித்தான் நேருவுடனான கிருபளானி முதல் சந்திப்பு நேர்ந்தது.

டெல்லி மாநாட்டிற்கு செல்வதற்கு இளம் பட்டாளத்துடன் வேறொரு பெரியவர் அலகாபாத் ரயில்நிலையத்தில் நிற்கிறார். இளைஞர் குழாமுடன் வயது வித்தியாசம் பார்க்காமல் ஜோக் அடித்து சிரித்து மகிழும் இவர் யாரோ என கிருபளானிக்கு தெரிந்து கொள்ளும் மன அவஸ்தை ஏற்பட்டது. அவர்தான் மோதிலால் நேரு என சொல்கின்றனர். வியக்கிறார் கிருபளானி.

மாளவியா பெட்டியில் நாம் செல்லவில்லை என்கிறார் மோதிலால். மாளவியாவுடன் மரியாதை கலந்து சற்று தள்ளித்தான் நிற்கமுடியும் என்பதை அறிந்த அந்த இளைஞர்களுக்கு மேலும் உற்சாகம் கூடியதை கிருபளானி பார்க்கிறார்.

காந்தியிடம் எல்லாவற்றிற்கும் தீர்வுண்டு என பலர் தங்கள் தனிப்பட்ட விவகாரங்களுக்கு பரிகாரம் கேட்டு நேரிலும் கடிதம் மூலமும் தொந்தரவு செய்வதை கிருபளானி 'எனது காலம்' புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். தலைவலிக்கு கூட பரிகாரம் கேட்டதை சற்று கேலியாக சொல்வார். சில நேரம் காந்தியும் குறும்பு கொப்பளிக்க அநியாய **frank and blunt** ஆக பதில் தந்துவிடுவார்.

பெண்மணி ஒருவர் தன் இல்லற சுகம் கிடைக்காமையை சுட்டிக்காட்டி கணவர் ஒத்துழைப்பதில்லை என்ற புகாரை சொல்கிறார். உங்களுக்கு சுகம் அவசியம் எனக் கருதினால் வேறு கல்யாணம் செய்துகொண்டு பிரச்னையை தீர்த்துக்கொள்ளப்பாருங்கள் என காந்தி அந்த பெண்மணிக்கு பதில் தந்தார். அந்தப் பெண் அதிர்ந்து போனதாக கிருபளானி சொல்கிறார்.

கிலாபத் பிரச்னை எழுந்தபோது சில முஸ்லீம் தலைவர்கள் காந்தியை சந்திக்கிறார்கள். அஜ்மல்கான், அன்சாரி, அலி சகோதரர்கள் ஆகியவர்களுடன் காந்தி விவாதிக்கிறார். அகிம்சை வழி நின்று ஒத்துழையாமைக்கு இசைந்தால் தன்னால் முழுமையாக உடன்நின்று போராடமுடியும் என காந்தி உறுதிமொழி தருகிறார்.

டெல்லியில் கிலாபத் மீட்பு போராளிகள் மாநாடு ஒன்றை கூட்டுகிறார்கள். காந்தியையும் சுவாமி சிரத்தானந்தாவையும் அழைக்கிறார்கள். காந்தியுடன் மகாதேவதேசாய்,

கிருபளானி செல்கின்றனர். மாநாட்டில் கூடிய மௌல்விகள்- மௌலானாக்கள் வன்முறை தவிர்ப்பு என்பதற்கு புனித குரானில் இடமிருக்கிறதா என்பதை விவாதமாக்கினர்.

காந்தி குர்ஆன் வன்முறையை அனுமதிக்கிறதே தவிர அதை கட்டாயமாக்கியதாக தெரியவில்லை permissible but not mandatory என்றார். வன்முறை வழியில்தான் அனைத்து தீர்வுகளும் என புரிந்துகொண்டால் முஸ்லீம் சகோதரர்களிடையே கூட அன்றாட வாழ்வு சிக்கலாகிவிடுமே என கருத்து தெரிவித்தார். அஜ்மல் கானும், அன்சாரியும் இதை உடன் ஏற்றனர். அலி சகோதரர்களும் உடன்பட்டனர். மௌல்விகளிடம் இதை எடுத்துக் கூறினர். இறுதியில் அம்மாநாடு அகிம்சை வழியில் கிலாபத் இயக்கம் என்ற முடிவை எடுத்தது.

மாநாட்டிற்கு முன்பு இந்துக்களின் ஆதரவைப் பெற பசுகொலையை கைவிட நாங்கள் தயார் என்கிற அறிவிப்பை செய்யலாம் என சில முஸ்லீம் தலைவர்கள் தெரிவித்தனர். காந்தியிடம் இந்த செய்தி சொல்லப்பட்டது. முஸ்லீம்கள் மனம் உவந்து பசு குறித்த முடிவை எடுக்கலாம். உதவி பெற பதில் உபகாரம் என எடுக்கவேண்டியதில்லை. முஸ்லீம்கள் துன்பத்தில் இருக்கும்போது அவர்களுக்கு எதிர்பார்ப்பின்றி உதவி செய்யவேண்டியது இந்துக்கள் கடமை என காந்தி பதிலளித்தார்.

## III

1928 டிசம்பரில் காங்கிரஸ் கல்கத்தாவில் கூடுகிறது. அனைத்து கட்சி கூட்ட அடிப்படையில் ஏற்கப்பட்ட இந்தியாவிற்கான அரசமைப்பு விதிகள், டொமீனியன் அந்தஸ்து குறித்து மோதிலால் விளக்குகிறார்.

காந்தியும் அன்றைய சூழலில் சாத்தியமான ஒன்றையே நாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார். சீனிவாச சாஸ்திரி, நேரு, சுபாஷ் ஆகியோர் தலைமையில் சிலர் சென்னை காங்கிரஸ் தீர்மானமான பூரண சுதந்திரம் என வற்புறுத்துகின்றனர். நிலைமை உஷ்ணப்பட்டு வாக்கெடுப்புவரை நகர்த்தப்படுகிறது.

காந்தி மொழிந்த தீர்மானத்திற்கு சுபாஷ் பூரண சுதந்திரம் என்கிற திருத்தத்தை வைக்கிறார். சுதந்திரம் என வாயால் முழங்குவது ராம், அல்லா, கிருஷ்ணா என அடிக்கடி சொல்வது போன்ற ஒன்றல்ல. பெரும் தயாரிப்புகள் அவசியம் - அடுத்த ஆண்டு அப்படி தீர்மானம் போடலாம் என காந்தி சொன்னதை மூத்தவர்களின் கையாலாகத்தனம் என இளசுகள் நிராகரித்தன.

வாக்கெடுப்பில் சுபாஷ் திருத்தம் 973 வாக்குகளையும் காந்தி தீர்மானம் 1350 யையும் பெற்றது. முதுமை இளமை என பாகுபாடு இல்லாமல் 'ஸ்வராஜ் –ஆசாதி' என ஒன்றாக முழங்குவோம் என மோதிலால் நிறைவு செய்கிறார்.

வல்லபாய் அப்போதுதான் முதல்முறையாக கல்கத்தா வருகிறார். நேரு, சுபாஷையெல்லம் காந்தி பார்த்துக்கொள்வார். சற்று கல்கத்தாவை சுற்றுவோம் என கிருபளானியையும் அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். திரும்பி காங்கிரஸ் பந்தலுக்கு வந்தபோது கிருபளானியிடம் உள் நுழைவு சீட்டு இருந்ததால்,அவரை போகலாம் என்கின்றனர். வல்லபாயிடம் இல்லை. அனுமதி மறுக்கப்படுகிறது. இவர் சர்தார் பெரும் காங்கிரஸ் போராளி என கிருபளானி வாதிட்டதெல்லாம் வாயிற் காப்பவர்களிடம் எடுபடவில்லை. மறுநாள் காங்கிரஸ் அமர்வில் சர்தார் விவசாயிகளுக்காக செய்த பர்தோலி சத்தியாகிரகம் வெகுவாக பாராட்டப்பட்டு வல்லபாய் மேடைக்கு அழைக்கப்படுகிறார். மிகுந்த கூச்சத்துடன் சென்ற வல்லபாய் கௌரவிக்கப்படுகிறார்.

அந்த காலத்தில் பல தலைவர்களின் போட்டோக்கள் பிரபலமாக அறிமுகமாக வாய்ப்பில்லை. இப்போதுபோல் நின்றால் நடந்தால் முகநூலில் தன் போட்டோக்களை போட்டு ரசித்து 'பிரமோட்' செய்துகொள்ளும் வாய்ப்புகள் இல்லாத காலமது. வாயடிப்புகளும் கொஞ்சம் குறைவுதான். செய்யமுடியாத விஷயங்களை பேசினால் இடித்து சொல்லும் தலைமையிருந்தது. இப்போது போல் பேசியவற்றிற்கு எந்த பொறுப்பையும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என சூழல் அனுமதி சற்று குறைவாக இருந்துள்ளது.

காந்தியிடம் முக்கியமான குணம் பழக்கம் ஒன்று இருந்தது. பிரச்னை அவரிடம் தெரிவிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களிடம் அவர்களிடத்திற்கே சென்று நேரில் பேசி விவாதித்து பிரச்னை குறித்த புரிதலை உருவாக்கிக்கொள்வார். அவர் நியாயம் என உணர்ந்தால் அதற்காக உறுதியாக நிற்பார். உரியவர்களுடன் உடன் நின்று தன்னை வருத்திக்கொண்டு போராடி தீர்வு காண்பார். சமரசம் என்பதை எவருக்கும் தோல்வியாக்கிவிடாமல், வெற்றி இருபக்கத்தாருக்குமாக அமையுமாறு இருந்தால் ஏற்பார்.

தன் மொழியில் அவர் எப்போதும் கவனமாக இருப்பார். மொழியை மிகுந்த மரியாதை கொண்டதாக அமைத்துக்கொள்வார். வீரம் என்பதை அவர் பேச்சிலோ எழுத்திலோ காட்டியதில்லை. ஓர் அடி போதும், முடிந்தால் அனைவருடனும், இல்லையேல் தனியாகவே ஆனாலும் என்பதில் கவனம் செலுத்துவார். இந்தக் குணத்தைத்தான் டெலிகாம் தொழிற்சங்கத்தில் தோழர் ஓ பி குப்தா எடுத்தாண்டார்.

இரண்டாவது வட்டமேஜை மாநாடு முடிந்து காந்திஜி திரும்பிய நிலையில் வடமேற்கு பகுதிகள், வங்கம், உ பி பகுதிகளில் அரசாங்க அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்பட்ட செய்தி அவருக்கு தரப்படுகிறது. காந்தி இர்வின் உடன்பாட்டிற்கு பின்னரும் புதிய வைஸ்ராய்

வில்லிங்டன் ஏன் இந்த நிலைப்பாட்டை எடுத்தார் என்பதை முதலில் காந்தி அறிய விரும்புகிறார்.

நிலைமைகளை விளக்கி வைஸ்ராய்க்கு தந்தி அனுப்புகிறார். நேரம் ஒதுக்க வேண்டுகிறார். வைஸ்ராயின் செயலரிடமிருந்து டிசம்பர் 31, 1931ல் காந்திக்கு பதில் தந்தி கொடுக்கப்படுகிறது. அதில் கடந்த சில மாதங்களில் நடந்த எல்லை மீறல்களுக்கு காந்தி பொறுப்பில்லை- லண்டனில் இருந்தீர்கள். ஆனால் உங்கள் தோழர்களின் செயல்களுக்கு நீங்கள் **'responsibility disclaim'** அதாவது நீங்கள் பொறுப்பில்லை என அறிவித்தால் வைஸ்ராய் சந்திப்பிற்கு நேரம் ஒதுக்கலாம் என சொல்லப்பட்டிருந்தது.

ஜன 1, 1932ல் காந்தி பதில் அனுப்புகிறார். என்ன நடந்தது ஏன் அடக்குமுறை என்பதை வைஸ்ராயிடமிருந்தே அறியவேண்டும் எனக் கருதிதான் சந்திக்க நேரம் வேண்டியிருந்தேன். உங்கள் தரப்பு நியாயத்தை தெரிந்துகொள்வதற்கு முன்பாகவே என்னால் என் தோழர்களை எப்படி கண்டனம் செய்ய முடியும் என்ற வினாவை காந்தி எழுப்பினார்.

பயங்கரவாத செயல்களை அரசாங்கம் கண்டிக்கும்போது, அதை நான் கண்டித்து ஏற்பின்மையை தெரிவித்தே உள்ளேன். ஆனால் விவசாயிகளின் வரிகொடா இயக்கத்தை எப்படி கண்டிக்க முடியும். அது அவர்களின் நியாயம் கேட்கும் போராட்டமாக இருக்கும்போது, சம்பந்தப்பட்டவர்கள் பேசுவதும் தீர்விற்கு முயற்சிப்பதும் தான் முறையாக இருக்கும் என காந்தி தந்தி அனுப்பினார்.

எனவே ஆள்வோர் எவராக இருப்பினும் அவர்களது கொள்கை நடைமுறையில் வேறுபட்டவர்கள் ஆட்சியாளர்களை **negotiation tableக்கு** கொண்டுவருவதற்கான முயற்சியில் தளர்ந்துவிடக்கூடாது - அதேபோல் நாம் எவருடன் விவாதிக்க வேண்டுமோ அவரை வெறுப்பு பேச்சு மூலம் தள்ளிப்போகவும் செய்யக் கூடாது- வெறுப்பு மொழிக்கு பதில் வெறுப்புமொழியால்தான் என்ற புரிதலும் உதவாது-

என் லெவெல் மட்டம் என்ன என்ற உணர்வை ஒருவர் மறந்துவிட்டு எவ்வளவு உரக்க திட்டுகிறோமோ அவ்வளவு உயர்ந்த வீரன் என சுயதிருப்தி அடைவதால் பிரச்னை தீராது. கேலி பேச்சுகளும் உதவாது என்பது காந்தி தரும் செய்தியாக இருப்பதைக் காண்கிறோம்.

உலகம் என்னால் இயங்குகிறது நானே மிகச் சரியானவன் என்ற உணர்வு பெரும் தொந்தரவாகிவிடும். நாம் தெரிந்து கொள்வதற்கு பல தரப்புகள் இருக்கின்றன. பல தரப்பில் என் தரப்பும் ஒன்று என்ற புரிதல் தான் எவரையும் நிதானப்படுத்தும். வெவ்வேறு

தரப்புகளுக்கு கதவடைக்காமல் இருந்தால்தான் என் தரப்பின் நியாயம் நியாயமின்மை போதாமையை நான் உணரமுடியும்.

எவரிடத்தும் அரசாங்கத்திடமும் அச்சமற்று நாம் இருக்கலாம். எவரும் நம்மைப் பார்த்து அச்சப்படாமலும் இருக்கலாம். அச்சமற்று இருப்பது என்பது பொறுப்பில்லாமல் இருப்பது பேசுவது என்ற பொருளைத் தராது என்பதை காந்தியிடமிருந்து நாம் புரிந்துகொள்ளலாம்.

அமைப்பு என்றாலே அதற்கான game rules பொதுவாக இருக்கத்தான் செய்யும்.பொறுப்பிற்கு வந்தவர்களிடத்தும் - வர விரும்புவர்கள் அல்லது அவர்கள் செய்வதை ஏற்கமுடியாதவர்கள் மத்தியிலும் ஒருவகை போராட்டம் மெலிதாகவோ மிகுந்த உஷ்ணத்துடனோ நடக்கவே செய்யும்.

இப்போது காங்கிரசில் பல விலகல்கள் நடந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். 1936லும் பெரும் மண்டைகள் மத்தியில் இப்படி ஒரு போராட்டம் நடந்தது. நேரு காங்கிரசின் தலைவர். கிருபளானி பொதுச்செயலர். வல்லபாய், பிரசாத், ராஜாஜி, தௌலத்ராம், பஜாஜ் கிருபளானி எல்லோரும் ஒருசேர ஒன்றாக கையொப்பமிட்டு நேருவின் அணுகுமுறையால் வருத்தமுற்றனர். இணைந்து வேலை செய்யமுடியாது என்பதை தெரிவித்து CWC யிலிருந்து விலகும் கடிதத்தை ஜூன் 29, 1936ல் கொடுத்தனர்.

நேரு மத்திய செயற்குழுவில் ஜெயபிரகாஷ் போன்ற மூன்று சோசலிஸ்ட்களையும் வைத்திருந்தார். அவர்களுடன் நேருவிற்கு ideological affinity அதிகம் இருந்ததில் வியப்பு இருக்க முடியாது.

எப்போதும் சோசலிசம் சொத்து பறிப்பு என காங்கிரசின் தலைவர் பேசுவதால் பல காங்கிரஸ்காரர்கள் தேசவிடுதலை என்பதற்கு காங்கிரஸ் தலைவரிடம் முன்னுரிமை இருக்கவேண்டாமா என அதிருப்தி அடைந்ததை மூத்த அந்த விலகல் தலைவர்கள் சுட்டிக்காட்டிருந்தனர்.

நேரு இவர்களுக்கு எந்த பதிலையோ அல்லது வேண்டுகோளையோ விடவில்லை. விலகல் தலைவர்கள் காந்தியை சந்தித்தனர். அவரின் அறிவுரையை ஏற்று இரண்டே நாட்களில் அதாவது ஜூலை 1, 1936ல் தங்கள் விலகல் கடிதத்தை திரும்ப பெறுவதாகவும், தனிப்பட்ட வருத்தம் நேருவிடம் ஏதும் இல்லை எனவும், எங்களை போன்றவர்களை வழக்கொழிந்தவர்கள் எனச் சொல்லும் பிரச்சாரம் தொடர்ந்து நடந்தபோது, நேருவிற்கு உகந்த ஒருமித்த செயற்குழு அமைத்துகொள்ளட்டும் என்ற மன உணர்வில் விலகலை

தந்ததாகவும் எழுதினர் . காந்தியை சந்தித்தையும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இரண்டு கடித draftயையும் பிரசாத் தான் செய்திருந்தார்.

நேருவிடம் இதற்கும் பதில் இல்லை. அவர் காந்திக்கு ஜூலை 5, 1936ல் கடிதம் எழுதுகிறார். செயற்குழுவில் ஆவி போகிறது என்ற உள்ளக் குமுறலை பதிவு செய்திருந்தார். தாங்கள் ஓரளவிற்கு நிலைமைகளை சீராக்கியுள்ளீர்கள். எவரிடத்தும் எவருக்கும் loyalty இருப்பதாக தெரியவில்லை என்பது அக்கடித உட் குறிப்பாக இருந்தது.

கிருபளானி மீது நேருவிற்கு வருத்தம் இருந்தது. மூத்தவர்கள் இப்படி கருதுகிறார்கள் என்பதை அவர் சொல்லாமல் இருந்தது ஏன் என்பது நேருவின் கேள்வி. இதற்கு தன்னிலை விளக்கமாக கிருபளானி நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார். காந்திக்கு அடுத்த தான் விரும்பும் மிக முக்கிய தோழர் நேருதான். கிருபளானி சுசேதா ஆகிய எங்கள் திருமணமே நேரு சிறையிலிருந்து வெளிவந்த பின்னர்தான் என தள்ளிப்போட்டோம். ஆனால் சோசலிச எண்ணம் என்னிடம் இருந்தாலும், ரஷ்யாவின் சில சாதனைகளைப் பாராட்டினாலும் அதுதான் மாடல் எனச் சொல்லி, காந்தியை சிறுமைப்படுத்த முயற்சிக்கும் போக்கு  விடுதலை போராட்டத்திற்கு தீங்காக அமையும் என்பதால் சோசலிஸ்ட் இளைஞர்கள் எதிர்த்து போராட வேண்டியுள்ளது என கிருபளானியின் விளக்கம் சென்றது. இதற்கும் நேருவிடமிருந்து பதில் இல்லை.

அமைப்பில் இன்று பெரும் தலைவர்களாக கருதப்படுவோரெல்லாம் மனம் கசந்து பின் இணைந்து பணிசெய்த வரலாற்றைப் பார்க்கிறோம். அமைப்பு பணி என்றால் குழு உரசல் இல்லாமல் இருப்பதில்லை. கூடுதல் சகிப்புத்தன்மை  எல்லைக்கோட்டுடன் சற்று நிதானம்  என்பது இருந்தால் அமைப்பின் ஒற்றுமை கூடும். முடிந்தவரை double standard என்பது இல்லாமல் இருக்க பழகவேண்டும். அவ்வப்போது **turning search light inward- self introspection** என்பது அமைப்பு வீரர்களுக்கு பழக்கமாகிவிட்டால் அந்த அமைப்பு பலரின் நம்பிக்கையை பெறலாம் என்பதையும் காந்தியிடம் கற்க முடியும்.

விடுதலைக்கு முன்னரான காங்கிரஸ் மாநாடுகள் எப்படி நடத்தப்பட்டன என்பதற்கு சாம்பிள் பதிவு ஒன்று  1938 ஹரிபுரா மாநாட்டு ஏற்பாடு எனலாம். அப்போது மாநாடு என்றால் நந்தலால் போஸை அழையுங்கள் என்பார்கள். மாநாடு நடக்கவிருக்கும் கிராமத்தை அவர் எழிலாக மாற்றிவிடுவார். கலைக்கண்களுடன் காரியமாற்ற அவருக்கு சாந்தி நிகேதன் மாணவர்கள் உடன் நின்று உதவுவர். அருகாமையில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டே மாநாட்டின் பந்தலோ, தங்குமிடமோ, இதர சார்பாளர் சௌகரியங்களோ உருவாக்கப்படும். மின்வசதி போன்ற தவிர்க்கமுடியாதவைதான் வெளியிலிருந்து கொணரப்படும்.

பத்தாயிரம் பேருக்கு தங்கும் வசதி என்பது பெரும் சவாலாக அன்று ஹரிபுரா வரவேற்புக்குழுவிற்கு இருந்திருக்கும். ஆனாலும் செய்து முடித்த மாபெரும் வரலாறு காங்கிரசிற்கு இருந்தது. உருவாக்கப்பட்ட அந்த குஜராத் கிராம நகருக்கு வித்தல் நகர் என அவர் நினைவாக பெயரிட்டனர். முப்பது மைல் தொலைவிலிருந்த சூரத்திலிருந்து மின்வசதி பெறப்பட்டது. அதுவே பெரும் சாதனைதான். 500 கறவை பசு மாடுகள் தனியாக மாநாட்டின் தேவைக்காக கட்டப்பட்டிருந்தன. ஒரே நேரத்தில். ஆயிரம் பேருக்கு உணவளிக்கும் வகையில் சாப்பாடு பரிமாற 18 இடங்கள் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குஜராத் என்பதால் வல்லபாய் படேலின் வழிகாட்டுதல் இந்த ஏற்பாடுகளில் முழுமையாக இருந்தது. Best organiser என்ற பெயர் அவருக்கு முன்பாகவே கிடைத்த ஒன்று என்பதால் காங்கிரஸ் தலைமை அது குறித்த கவலைகள் இல்லாமல் இருக்க முடிந்தது.

அப்போது காங்கிரசில் தலைவர் பதவிக்கு பொதுவாக ஓராண்டு காலத்திற்கே தேர்ந்தெடுக்கப்படுவர். சுபாஷ் சிறையிலிருந்து மார்ச்சில் வருகிறார். காந்தியை சந்தித்து தலைவராகும் விருப்பத்தை சொல்கிறார். காந்தி உடல் நலம் மோசமாக உள்ளதே அதை முதலில் தேற்றிக்கொள்ள வேண்டாமா என வினவுகிறார். இல்லை இயலும் என்கிறார் சுபாஷ். அடுத்த ஆண்டு எடுக்கலாமே என்கிற காந்தியின் ஆலோசனையை சுபாஷ் ஏற்காத நிலையில் சரி பொறுப்பெடுங்கள் என காந்தி ஆசி கூறுகிறார். சுபாஷ்க்கு காந்தியின் ஆதரவு என வந்தவுடன் பிறர் அதை ஏற்பது என்பதில் பொதுவாக பிரச்சனை இல்லாமல் போனது. சுபாஷ் காங்கிரஸ் தலைவரானார்.

காங்கிரசில் பொதுவான பழக்கம் தலைவர் எந்த மாநிலமோ அப்பகுதியிலிருந்து பொதுச்செயலர் வரவேண்டும். பொதுச்செயலர் கட்டுப்பாட்டில்தான் காங்கிரஸ் தலைமையகம் செயல்படும் என்ற ஏற்பாடு இருந்தது. கிருபளானி பிரசாத்திற்கும், நேருவிற்கும் பொதுச்செயலராக செயல்பட்டவர். சுபாஷ்க்கும் பொதுச்செயலராக தேர்வு பெறுகிறார். ஆனால் அலகாபாதில் தீன்மூர்த்தி பவனில் பல்வேறு வசதிகளுடன் நிரந்தரமாக காங்கிரஸ் அலுவலகம் என்பதை கிருபளானி கடந்த சில ஆண்டுகளில் நிறுவியிருந்தார். மத்திய செயற்குழு முடிவுகளை, காங்கிரஸ் அறிக்கைகளை அங்கிருந்து வெளியிடுவார். வழக்கம்போல் ஹரிபுரா குறித்த செய்திகளை சுற்றறிக்கையாக எழுதி தலைவர் ஒப்புதலுக்கு அனுப்புகிறார். சுபாஷோ கோபமடைந்து இவர் எப்படி வெளியிடமுடியும்- வெளியிடவேண்டாம் என்கிற தாக்கீதை அனுப்பிவிடுகிறார்.

கல்கத்தாசார்ந்த ஒருவர் பொதுச்செயலராக வந்திருக்கலாம் என சுபாஷ் கருதியதில் தவறு ஏதுமில்லை. சுபாஷ் சொல்லியிருந்தால் வசதி குறைவாக இருந்தாலும் நான் கல்கத்தா சென்று பணியாற்றிருப்பேன் என்பது கிருபளானி வாதம்.

பஞ்சாயத்து காந்தியிடம் செல்கிறது. இதற்கு முன்புள்ள தலைவர்கள் இதை அனுமதித்துள்ள நிலையில் புதிய பிரச்னை வேண்டாம் என அறிவுறுத்தியதை சுபாஷ் காந்தியிடம் ஏற்கிறார். பின்னர் அது குறித்து ஏதும் பேசுவதை தவிர்த்தார். தலைவர் சுபாஷ் நேரு குடும்ப விருந்தினராக மூன்று நாட்கள் அலகாபாத் செல்கிறார். ஆனால் 15 நிமிடம் மட்டுமே காங்கிரஸ் அலுவலகத்திற்கு formal ஆக வந்து போகிறார்.

அடுத்த திரிபுரா மாநாட்டில் பிரச்னை முற்றி பட்டாபி சீதாரமைய்யா சுபாஷ் போட்டியானது. சுபாஷ் வெற்றிபெறுகிறார். பிரச்னை காந்தி சுபாஷின் மோதலானது. செயற்குழுவை சுயேட்சையாக அமைக்கமுடியாமையை சுபாஷ் உணர்ந்தார். சுபாஷ் பதவி விலகி செல்லும் நிலையும் உருவானது.

1940 ராம்கர் காங்கிரசில் தலைமை தொண்டர் உறவு குறித்த மிக முக்கிய கருத்தாக்கம் ஒன்றை காந்தியடிகள் முன்வைத்தார். காங்கிரசின் தலைவர் அபுல் கலாம் ஆசாத் பேசியதற்கு பின்னர் பொது அரங்கில் காந்தி உரையாற்றினார். காங்கிரஸ் தலைவர்கள் காந்தியை தளபதியாக இருந்து போராட்டத்தை நடத்தவேண்டும் என வற்புறுத்தியபோது அவர் அக்கருத்தைப் பேசினார். அதிலிருந்து சில வரிகள்..

**Satyagraha is the path of truth at all costs. If you are not prepared to follow this path please leave me alone…But if you do not want to leave me and yet are not prepared to follow my methods and instructions, then I would like to know what kind of generalship is this that you offer me**

**Imagine a general marching to battle with doubting, ill prepared soldiers. He will surely March to defeat. I will not consciously make any such fatal experiment. A volunteer exercises his reason when he chooses his general but after having made the choice, he does not waste his time and energy in scanning every instruction and testing it on the anvil of his reason before following it…**

1942 ஆகஸ்டில் குவிட் இந்தியா தீர்மானம் நிறைவேற்றியவுடனேயே காந்தி கைது செய்யப்படுகிறார். நேரு, ஆசாத், படேல், கிருபளானி, பந்த், பட்டாபி சீதாராமையா, நரேந்திர தேவா, ஆசப் அலி, சையத் மகமுத் , சங்கர்லால் , பிரபுல்லா போன்றவர்கள் கைது செய்யப்பட்டு அகமதுநகர் போர்ட் சிறைக்குள் ஆக 9 1942ல் அனுப்பப்படுகின்றனர். அங்கே சில சுவாரஸ்மான அம்சங்களை கிருபளானி தருகிறார்.

12 பேர்கள் 10 அறைக்குள் இருக்கவேண்டும். நேரு சையத்துடன் வைக்கப்பட்டார். சங்கர்லால் பிரபுல்லா சேர்ந்து இருந்தனர். தேநீர் அழுக்கான கெட்டில் ஒன்றில் வந்தது. மரியாதைக் குறைவாக இருப்பதாக உணர்ந்த மௌலான கடுமையாக சத்தம் போட்டார்.

மற்றவர்களோ டீ போச்சே என்றனர். உணவு பெரும் பிரச்னை. சிறை உணவு ஒத்துவரவில்லை. தனியாக 'குக்' ஒருவரை அமர்த்திக்கொள்கிறோம் என்பதை அதிகாரிகள் ஏற்கவில்லை. நேரு தனக்கு சமையல் தெரியும் என முன்வந்தார். ஆனால் ஆம்லெட் மட்டுமே அவரால் முடிந்தது. ஆசப் அலி சாம்லி ரோட்டி தெரியும் என்றார். ஏதும் நடக்கவில்லை.

கிருபளானி முட்டையில்லா கேக் என செய்தார்.மௌலானாவும் ஆசப் அலியும் முட்டையில்லாமலா நம்பமுடியாது என்றனர். ஆனால் விடாமல் கிறிஸ்துமஸ் அன்றும் கிருபளானி செய்து பிரிட்டிஷ் அதிகாரிக்கு அதை தந்தார். சுசேதா இவர்களின் உபாதைகளை அறிந்து அனுமதி பெற்று பழங்களை, புத்தகங்களை அனுப்பினார். சில நண்பர்கள் ஸ்வீட் கொடுத்தனுப்பினர்.

பலருக்கும் மாதக்கணக்கில் சிறைவாசம் நீடித்தது. தேநீர் நேர விவாதங்கள் சமயத்தில் உஷ்ணமாகிவிடும். சில நாட்கள் சந்திப்பில் அரசியல் பேசாமல் தவிர்ப்பர். நேரு, கிருபளானி விளையாட்டில் ஆர்வம் காட்டினர். ஷட்டில் காக்கா மூச் என்பார் ஆசாத். அலியும், முகமதுவும் எதிலும் ஆர்வம் காட்டவில்லை. அங்கு புல்தரையில்லை. பல வண்ண கூழாங்கற்களை பரப்பியிருந்தனர். பட்டாபி சீதாராமையா அக்கற்களை நினைவாக பொறுக்கி வைத்துக்கொள்வார். விளையாட ஷூ தேவைப்பட்டது. அனுமதி பெற்று சொந்த செலவில் நண்பர்கள் மூலம் பெற்றனர்.

சுசேதா அனுமதி பெற்று இசைத்தட்டுகளுடன் கிராமபோனை நேருவிற்கு அனுப்பினார். ஆனால் அங்கிருந்த சூழலில் நேரு இசை ஆர்வத்தைக் காட்டவில்லை. இவர்கள் படித்தனர். எழுதினர். விவாதித்தனர். கசப்பான தருணங்களைக் கடந்தனர். மகாதேவ்தேசாய், கஸ்தூர் பா மறைவு செய்தி கூட மிக தாமதமாகவே கிடைத்தது. காந்தியின் நிலையை உணர்ந்து மனம் வருந்தினர். அவரது உண்ணாநோன்பு செய்தியும் இவர்களை வாட்டியது.

படேலிடம் மிக ஜாக்கிரதையாக விவாதிக்க வேண்டியிருந்தது. அவர் மிகக் கறாராக பேசுவார். நேரு டிஸ்கவரி ஆப் இந்தியா எழுதத்துவங்கினார். மௌலானா, நரேந்திர தேவாவிடம் முஸ்லீம்கள் குறித்தும், புத்தர் குறித்தும் கலந்துரையாடியே நேரு கருத்துக்களை நேர்படுத்திக்கொண்டார்.

மௌலானா புனித குரானுக்கு அற்புத விளக்கம் எழுதினார். கிருபளானி காந்தி குறித்து எழுதினார். பட்டாபி சீதாராமையா காங்கிரஸ் வரலாறு குறித்து சேகரிப்புகளைச் செய்தார். தேவா புத்த ஆய்வுகளை செய்தார். படேல் ஏதும் எழுதவில்லை. மிகத் தீவிரமாக வாசித்து வந்தார்.

மௌலானா துணைவியார் மறைந்த செய்தியை மிகத்துக்கத்துடன் அவர்கள் எதிர்கொண்டனர். சையத் அகமது மட்டும் தான் குவிட் இந்தியாவை எதிர்த்தவன் என அப்பீல் செய்து விடுதலையானார். சக தோழர்களுக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் காந்தியை சந்தித்து தனது மனநிலையை சையத் வெளிப்படுத்தினார்.

இப்படி சிறைவாழ்வில் வதைகளும் சோதனைகளும், உடல் உபாதைகளுடன் மனவலியும் சேர்ந்திருந்தாலும் அவர்கள் தங்கள் சிரிப்பை, விளையாட்டை, கிண்டல் கேலிகளை விடாமல் வைத்துக்கொண்டு ஆண்டுகணக்கிலான அச்சோதனைகளை வென்றுள்ளனர். இன்றைய விடுதலைக்கு இது போன்ற ஏராள தியாகங்கள் உரமாகியுள்ளன.

IV

பெதிக் லாரன்ஸ் கேபினட் குழு அறிவிப்பைத் தொடர்ந்து இந்தியாவின் விடுதலைக்கான பூர்வாங்க காரியங்கள் with all strains நடக்கத்துவங்கின. இரண்டு முக்கிய அம்சங்கள் இதற்கு முன் சாட்சியமாக வேண்டும். ஒன்று இடைக்கால இந்தியர்களின் அரசாங்கம். மற்றது அரசமைப்பு சபை.

இடைக்கால அரசாங்கத்தில் காங்கிரசையும் முஸ்லிம் லீகையும் இடம்பெற வைப்பதில் பெரும் பிரச்னை உருவானது..தொடர் போராட்டங்களுக்குப் பின்னர் செப் 2, 1946ல் காங்கிரஸ் தலைவராக இருந்த நேருவை அரசாங்கம் அமைக்க வைஸ்ராய் அழைக்கவேண்டியதானது. லீக் வராவிட்டாலும் அதை செய்ய வைஸ்ராய் பணிக்கப்பட்டார்.

அன்றுள்ள விதிகளின்படி அது வைஸ்ராய் எக்சிக்யுட்டிவ் கவுன்சில்தான். ஆனாலும் டொமினியன் அரசாங்க கேபினட் போல் அன்றாட வைஸ்ராய் தலையீடு இல்லாமல் உறுப்பினர் மந்திரி போல் நடைமுறையில் செயல்பட முடியும் என்ற உறுதிமொழியை வேவலிடமிருந்து நேரு பெற்றப் பின்னர்தான் தனது 12 சகாக்கள் பெயரை அவர் தந்தார். லீகிற்கு இரு இடங்கள் ஒதுக்கப்பட்டு vacant ஆக வைக்கப்பட்டன.

சற்று விவரமானவர் என அறியப்பட்ட போபால் நவாப் சமரசம் செய்ய முன்வந்தார். வேவலிடம் அனுமதி பெற்றார். உடன்பாட்டின் நகலை காந்தியிடம் காண்பித்துவிட்டு ஜின்னாவிடமும் எடுத்துச் சென்றார்.

சாரத்தில் மூன்று அம்சங்கள் அதில் இருந்தன. லீக் இந்திய முஸ்லீம்களின் பிரதிநிதி. காங்கிரஸ் முஸ்லிம் அல்லாதவர் மற்றும் அதில் உள்ள முஸ்லீம்களின் பிரதிநிதி. கேபினட்டில் ஒருங்கிணைந்து வைஸ்ராய் தலையீட்டைக் கோராமல் இணக்கமாக வேலைசெய்வது.

உடன்பாட்டில் காந்தியின் கையொப்பம் பெற நவாப் வருகிறார். காந்தி கடும் வேலைகளின் மத்தியில் நவாப் நீட்டிய இடத்தில் கையெழுத்திடுகிறார். ராஜ்குமார் கௌர் படித்துவிட்டு கையெழுத்து இடவேண்டாமா என இடை மறிக்கிறார். நவாப் பார்த்துக்கொள்வார் என அவர் மீதான நம்பிக்கையை காந்தி வெளியிட்டு அவசரமாக கிளம்புகிறார்.

நவாப் கையெழுத்து பெற்றதில் இரண்டாவது சொல்லப்பட்ட clause ன் சாரம் இல்லை. காங்கிரஸ் செயற்குழு இதை எப்படி ஏற்பது என்றது. தகவல் காந்திக்கு சொல்லப்படுகிறது. நவாப் சரியாகத்தான் எழுதியிருப்பார் எனக் கருதி தவறிழைத்துவிட்டதாகவும் காங்கிரசை தான் வலியுறுத்த முடியாது என்றும் தவறுக்கு தண்டனையாக அரசியலிலிருந்து ஒதுங்குவதே நல்லது என்றும் காந்திஜி கருத்து தெரிவிக்கிறார். ஜின்னா ஏற்காததால் அந்தப் பகுதியை தான் நீக்கியதாக நவாப் சமாதானம் தெரிவித்தார்.

பிரச்னையை அதிகமாக்காமல் காங்கிரஸ் அந்த உடன்பாட்டை ஏற்று லீக் பிரதிநிதிகள் உள்ளே வரும் சூழலை உருவாக்க முடிவெடுத்தது. ஆனாலும் பிரச்னைகள் தீரவில்லை என்பதையே தொடர்ந்த வரலாறு காட்டியது.

1946ல் காங்கிரஸ் தலைவராக கிருபளானி ஆற்றிய உரையில் இந்து- முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தார். முஸ்லீம்களை அந்நியராக நினைக்கும் இந்துக்களும், இந்நாட்டை விட்டு தங்களை அந்நியராக நினைத்துக்கொள்ளும் இஸ்லாமியரும் நாட்டின் சுதந்திரத்திற்கும் வளர்ச்சிக்கும் எதிராக நிற்பவர்கள் என்றார் கிருபளானி.

சமயம்- வழிபாடு என்பதைத் தவிர நம்மிடம் உள்ளவையெல்லாம் பொதுத்தன்மை கொண்டவையே. ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு இணைந்து வாழ்வதில்தான் இந்தியா தன் சிறப்பை உலகிற்கு சொல்லமுடியும் என்றார் கிருபளானி.

இந்து பெரும்பான்மை பகுதியில் முஸ்லீம்களின் உயிர், உடைமை, குடும்பத்திற்கு பாதுகாப்பு இல்லை என்ற சூழலோ, அதேபோல் முஸ்லீம் பெரும்பான்மையான பகுதியில் இந்துக்களுக்கு பாதுகாப்பில்லை என்ற சூழலோ நாகரீகமான சமூகத்தின் அடையாளங்களாகாது. இரு பக்கத்திலும் வெறியை தூண்ட சிலர் இருப்பர். அவர்கள் நம்மை கற்காலத்திற்குத்தான் அழைத்து செல்வர்.

அதிகார அரசியல் ஆபத்தையே உருவாக்கும். அரசியல் என்பது மக்கள் சேவைக்கான மார்க்கம் என்பதை நாம் கைவிட்டால் அழிவு உறுதி என எச்சரித்தார் கிருபளானி. மேற்கண்ட கருத்துக்களை கொண்ட அவரது உரையை அவர் தன் புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

மௌலானா ஆசாத் தனது India wins Freedom தன் வரலாற்றிலும், ஆச்சார்யா கிருபளானி My Times தன் வரலாற்றிலும் இருவகையான மதிப்பீடுகள் தருவதைக்  காணலாம்.

ஆசாத் நேரு குறித்து எழுதியிருப்பது..

**I have often wondered how Jawaharlal was won over by Lord Mountbatten. Jawaharlal is a man of principle, but is also impulsive and amenable to personal influence. The arguments of Sardar Patel must have had some effect, but could not have been decisive. Jawaharlal was also greatly impressed by Lord Mountbatten, but perhaps even greater influence of Lady Mountbatten**.

**Another person who probably influenced Jawaharlal was Krishna Menon…I knew Jawaharlal often listened to his advice. I did not feel very happy about this, as I felt Krishna Menon often gave him wrong advice..**

ஆச்சார்யா கிருபளானி மௌலான ஆசாத் குறித்து critical ஆக பல இடங்களில் எழுதியுள்ளார். மேற்கூறிய விஷயத்தை சொல்லிவிட்டு மௌலானா குறித்த தனது விமர்சனத்தை இவ்வாறு வைக்கிறார்.

**The Nationalist Muslim leaders had little influence over their coreligionists. They were congress leaders..no nationalist Muslim leader ever went to the riot affected areas, whether in Calcutta or Noahkhali, Punjab or NWF. They could have told the Muslims that what they have done was unislamic..**

**Maulana always led the Id prayers in Calcutta. Even this privilege was denied to him, though on such occasions he never talked politics, while the League leaders even when addressed religious meetings in mosques, waxed eloquent on League politics. Rarely were purely Muslim meetings addressed by Nationalist Muslim leaders..they always addressed mixed meetings, attended by few Muslims**

ஆச்சார்யா கிருபளானி பல விஷயங்களை ஆதார அடிப்படையில் இந்த புத்தகத்தில் பேசியிருந்தாலும் மௌலான குறித்த இந்தப் பதிவில்  சற்று bias இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. காங்கிரசை இந்துக்கள் ஸ்தாபனம் அதன் தலைவர்கள் இந்து தலைவர்கள் என ஜின்னா விமர்சித்து ஏற்க மறுத்த நிலையில் இந்த தேசிய முஸ்லீம்கள்தான் காங்கிரசின் முகம் முற்றிலுமான இந்து முகமல்ல அது composite culture கொண்டது என பறைச்சாற்ற உதவியவர்கள் என்கிற புரிதல் அவசியம். கிருபளானி போன்ற பேரறிஞர்களுக்கு இது நிச்சயம் தெரியும்…ஆனாலும் என்ன உளவியல் காரணம் என ஊகிக்க முடியவில்லை..

பிரிவினை கோபமா. அவர் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதுதான் பிரிவினையை தவிர்க்க முடியாமல் ஏற்பது என்ற தீர்மானம் பெருவாரியான வாக்குகளில் அமைப்பில் முடிவானது. பல amendments இவரால் தள்ளுபடியும் செய்யப்பட்டது…

கான் அப்துல் கான் பகிரங்கமாக கண்ணீர் மல்க பிரிவினை தீர்மானத்தை எதிர்த்தபோது ஆசாத், ஆசப் அலி, சையத் முகமது ஆகியோர் - நால்வரும் ஒன்றாக நின்று காங்கிரஸ்

கூட்டத்தில் எதிர்த்திருந்தால் காந்தியின் ஆதரவு அவர்களுக்கு கிடைத்திருக்கலாமே. பிரிவினைக்கு பிறரை குறைசொல்லும் ஆசாத் ஏன் அப்போது அமைதி காத்தார் என கிருபளானி எழுதுகிறார்

வரலாற்றை எழுதுவது மனிதனின் கை மட்டுமல்ல. மனமும் கூடத்தான். அதுவும் சொந்த அனுபவத்திலிருந்து பல்வேறு வரலாற்று சமகால மனிதர்கள் ஒருவரைப்பற்றி மற்றவர் எழுதும்போது different account open ஆவது ஆச்சர்யமான ஒன்றல்ல என்றே என் வாசிப்பின் புரிதல் எனக்கு சேதி சொல்கிறது.

மகாத்மா காந்தி ஆகஸ்ட் 15 , 1947 அன்று டெல்லியில் விடுதலை கொண்டாட்டநிகழ்வில் இருக்கவில்லை. கல்கத்தாவில் மதமோதல் பதட்ட தணிவிற்காக இருந்தார் என்பதை பலரும் அறிவோம்.

அன்று அதே தினத்தில் கல்கத்தாவில் காங்கிரசின் தலைவராக அப்போதிருந்த ஆச்சார்யா கிருபளானியும் காந்தியை பின் தொடர்ந்து அங்கிருந்தார். அவரும் விடுதலை கொண்டாட்டங்களில் பங்கேற்பதை தவிர்த்துவிட்டார். பிரிவினையின் துயர் என செய்தி வெளியிட்டார். ஆனால் மெளலான அந்த சிந்து மனிதர் எனக் குறிப்பிட்டு கிருபளானி குறித்த தனது கருத்தொன்றை வெளிப்படுத்தியிருந்தார். இப்படி பாகிஸ்தான் பகுதிக்கு போன மாநிலம் ஒன்றைச் சொல்லி தன்னை அவர் சிறுமைப்படுத்தியதாக கிருபளானிக்கு வருத்தம் நேர்ந்தது.

இதைவிட அவருக்கு தனிப்பட்ட துயரம் மனவலி ஒன்றும் இருந்திருக்கலாம். தனது துணைவியார் சுசேதா அங்கு வந்தே மாதரம் பாடப்போகிறார். முக்கிய வரலாற்று திருப்புமுனைத் தருணத்தில் நேரிடையாக அதைப்பார்க்க அவருக்கு அரசியல் சூழல் உறவு ச்சூழல் உதவாமல் போனது.

சுசேதாவும் தாகூரின் பேத்தி நந்திதாவும் பாடியதை வானொலி ஒலிபரப்பு வழியாவது கேட்கும் தவிப்பில் கிருபளானி அவஸ்தைப்பட்டார். நண்பர் ஒருவர் உதவியால் அந்த நள்ளிரவில் ரேடியோ வைத்திருந்த வீடு தேடிப்போய் அவர் கேட்டும் வந்து படுத்தார். அவர் மனதில் ஏராள எண்ண அலைகள்..

1946 செப்டம்பரில் இடைக்கால அரசில் நேரு, படேல் போன்ற காங்கிரசின் அதி உயர் தலைவர்கள் பொறுப்பெடுத்தனர். காந்தியின் ஒப்புதலுடன் பல ஆண்டுகள் பொதுச்செயலராக செயல்பட்ட கிருபளானி காங்கிரஸ் தலைவர் பொறுப்பை நவம்பரில் ஏற்கிறார்.

ஏப்ரல் 1947 லேயே 6 மாதங்களிலேயே நேருவுடன், படேலுடன் கருத்து வேறுபாடு வருகிறது. நேருவுடன் கூடுதலாக…காங்கிரஸ் தலைவரிடம் அரசாங்க தலைமை ஏதும் கலந்துகொள்வதில்லை என்பது கிருபளானியின் குற்றச்சாட்டு. இரகசிய காப்பு உறுதிமொழியால் காங்கிரசிற்குள் அரசாங்க விஷயங்களை பேசமுடியாது என்பது நேரு தரப்புவாதம். ஆகையால் காங்கிரஸ் தலைவரிடம் சொல்லமுடியவில்லை என்பது சாரம்.

காந்தியிடம் கிருபளானி தன் விலகல் கடிதத்தை கொடுக்கிறார். நேரு, படேலிடம் பேசுகிறேன். இணக்கமாக செல்லமுடியவில்லை என்றால் விலகிவிடலாம் என்றார் காந்தி. ஆகஸ்ட் 15 வரை சங்கடங்களை தரவேண்டாம் என விலகலை கிருபளானி வலியுறுத்தவில்லை. பின்னர் விலகினார்.

பீகார் கவர்னராக போக நேருவிடமிருந்து தாக்கீது வந்ததையும் கிருபளானி காந்தியிடம் தன் நிலையை சொல்லிவிட்டு மறுத்துவிட்டார்.

அரசாங்கத்தில் பொறுப்பெடுக்கும் கட்சி ஒன்றில் கட்சி ஸ்தாபன தலைமைக்கும் அரசாங்க தலைமைக்குமான உறவு இன்றளவும் பெரிதாக எக்கட்சியாலும் தீர்க்கப்படாமல் இருப்பதைக் காண்கிறோம். இரு அதிகார மய்யங்களா - எந்த மய்யத்திற்கு யார் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்பதில் தொடர்ந்து எதிரும் புதிருமான விளக்கங்களே நமக்கு கிடைத்து வருகின்றன.

1951ல் டாண்டன் நேரு மோதலுக்கு பின்னர் பல ஆண்டுகள் இரு அதிகார பொறுப்பையும் நேருவே எடுத்துக்கொண்டதைக் காண்கிறோம். சோனியா மன்மோகன் காலத்தில் இந்த உறவுகளை மிகவும் diplomatic ஆக மன்மோகன் சமாளிக்கவேண்டியிருந்தது.

வாஜ்பாய் அத்வானி குஷ்பாவு காலங்களில் பிஜேபியில் இந்த பிரச்னை வந்தது. மோடி தனக்கான இசைவு கொண்ட தன்னை மீறாதவர்களை தலைமைக்கு அமர செய்ததையும் காண்கிறோம்.

திமுகவில் ஆட்சி அதிகார மய்யமும், கட்சி அதிகார மய்யமும் ஓரிடத்தில் என்பதே செயல்படுகிறது. அண்ணாதிமுகவில் இந்த சோதனை பெரும்போராட்டங்களுடன் நடந்து வருவதைப் பார்க்கிறோம். ஆட்சித்தலைவரே கட்சித் தலைவர் என்றாகும்போது இந்த காப்பு உறுதிமொழிகள் என்னவாகிறது…

மக்கள் செல்வாக்கு பெற்றவரிடம் அனைத்து அதிகாரங்களும் மாற்றப்படுதல் என்பதே இதுவரையிலான ஜனநாயக புரிதலாக நம்மிடம் செயல்படுகிறது. மக்களிடம் செல்வாக்கைப் பெறுவதில் போட்டி- பெற்றபின் கடவுள் அந்தஸ்து - அனைத்தும் அறிவார் அவர் என்பது நம் ஜனநாயகத்தில் பண்பாகவும் மாறியுள்ளது…

இங்கு வயது வந்தோர் தேர்தல் மூலம்  பல கட்சி முறையில் அக்கட்சிக்கு வரும் தலைவரிடம் இந்த அதிகார குவிப்பு நடந்தால், முந்திய  சோவியத், இன்றும் சீனாவில் ஒரு கட்சி ஆட்சி முறையில் அதிகார குவிப்பு என்கிற வகையில் மக்கள் பழக்கப்படுத்தப்பட்டார்கள் படுகிறார்கள்..

ஆட்சி என்றால் ஒருவரிடம்  அந்த அவதார நாயகரிடம் பலரும் கூட்டு சேர்ந்து அதிகார குவிப்பை மனம் உவந்து கொடுப்பது என்ற நிலை உலகின் பல நாடுகளில் காணக்கிடைக்கலாம்..தேவையெல்லாம் அவருக்கான அமைப்பு backing மற்றும் சொல்வள வாயடிப்புகளும்தான்..

விடுதலைக்குப் பின்னர் நமது **constituent Assembly** யே நாடாளுமன்றமாகவும் செயல்பட்டது. அசெம்பிளி எனில் ராஜேந்திர பிரசாத் தலைமை தாங்குவார். நாடாளுமன்றம் எனில் மாவ்லங்கர் சபாநாயகராக இருப்பார்.

மார்ச் 1949 நாடாளுமன்ற கூட்டத்தில் அப்போது சற்று ஒதுங்கி மௌனியாக இருந்த கிருபளானியை கருத்துக் கூற காங்கிரஸ் கொறடா மல்யா வேண்டுகிறார். பேச ஆரம்பித்த கிருபளானி காந்தியை காப்பாற்ற முடியாத நிர்வாக திறமையின்மையை விமர்சிக்கிறார். இதுவே இங்கிலாந்தாக இருந்திருந்தால் சம்பந்தப்பட்ட பொறுப்பான அமைச்சர் பதவி விலகியிருப்பார். ஜப்பானாக இருந்தால் அவர் ஹராகிரி செய்து கொண்டிருந்திருப்பார் என கிருபளானி விமர்சித்தார்.

மறுநாள்  காங் பாராளுமன்ற  போர்டு கூடியது. படேல் பேசினார். என் நண்பர் என்னை வயிற்றை கிழித்துக் கொண்டு சாகச் சொல்கிறார் என கேலித் தொனியுடன் பேசினார். கிருபளானி இடை மறித்தார். அமைதி உருவாக்கப்பட்டு அப்பிரச்னை அத்துடன் நிறுத்தப்பட்டது.

1949 காந்தி பிறந்த நாளில் வானொலி உரையை கிருபளானி தந்தால் நன்று எனக்கருதிய தகவல் தொடர்பு அமைச்சக செயலர் அவரை பேச வேண்டுகிறார். செய்தி படேலுக்குப் போகிறது. படேல் அரசாங்க செயலரை அழைத்து அவரை ஏன் அழைத்தீர்கள் எனக் கேட்கிறார். காங்கிரஸ் தலைவராக இருந்தவர், காந்திஜி உடன் நெருக்கமாக இருந்தவர் என்பதால் அழைத்தேன் என்கிறார். இனி இது போல நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்கிற அறிவுரையை செயலருக்கு படேல் தந்தார்.

கிருபளானி தனது cousin கிருஷ்ண கிருபளானியை கொண்டு விஜில் எனும் பத்திரிகையை காங்கிரசிலிருந்து மாறுபட்டு வெளிவந்தவுடன் துவங்குகிறார். 10 ஆண்டுகள் வந்த விஜில்

நிதியை சமாளிக்க முடியாமல் வீழ்ந்தது. கிருஷ்ணா தாகூரின் பேத்தி நந்திதாவின் கணவர். பல புத்தகங்களை எழுதியவர்.

கிருபளானி நேரு படேல் அரசாங்கத்தை விமர்சித்து மாற்று கருத்துக்களை முன்வைத்து விஜிலில் வாரந்தோறும் எழுதிக்கொண்டிருந்தார். தேசிய பத்திரிகைகள் பல கிருபளானியின் கருத்துக்களை சிலநேரம் அப்படியே அவரது கட்டுரைகளை பிரசுரித்தன.

படேல் கோபமடைந்து பத்திரிகைகளுக்கு தாக்கீது அனுப்பினார். கிருபளானியின் கட்டுரைகள் இடம்பெறுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்ற செய்தி பத்திரிகை அதிபர்களுக்கு சென்றதாம்.

பிரிவினையின் போது இரு பக்க மக்கள் நகர்வுகளால் பெரும் பிரச்னை அல்லல்கள் உருவாயின. பாகிஸ்தான் பகுதியிலிருந்து வெளிப்போந்த சீக்கியர், இந்துக்களுக்கு டெல்லியில் தங்கும் முகாம்கள் இல்லை எனச் சொல்லி பலர் காந்தியை பார்க்கின்றனர். காந்தியும் உடனே உள்துறை அமைச்சர் படேலை தொந்தரவு செய்யாமல் அவரின் தனிச்செயலர் சங்கருக்கு தன்னை பார்க்க வரும்படி செய்தி அனுப்புகிறார். அரசாங்க அலுவல் அதிகம் இருப்பதால் தான் மிகவும் busy என்று சங்கர் வாளாயிருந்தார். காந்தியைப் போய் பார்க்கவில்லை.

நிர்வாக விஷயங்களில் காந்தி ஏன் தலையிடுகிறார் என்ற பேச்சு அந்த துறையில் இருந்ததாம்.

நேரு கூட வேறுபாடு இருந்தாலும் நான் சொல்வதை அமைதியாகவாவது கேட்கிறார். படேல் பொறுமையின்றி இருக்கிறார். எனக்கு வயதாகிவிட்டது. ஆகாச கோட்டை கட்டுவதாக நினைக்கிறார் என ஒருமுறை காந்தி நொந்துகொண்டார்…

அதிகாரம் எப்போதும் தனது குணத்தையே அது நிரப்பிக்கொள்ளும் ‘பாத்திரங்களுக்கு’ தரும் போலும்… அதிகாரத்திற்கு பிடிக்காத வார்த்தை அதை விமர்சித்து வரும் dissent ஆகவே காலந்தோறும் இருப்பதைக் காண்கிறோம்.

விடுதலைக்கால காங்கிரஸ் ‘கட்சிக்குள் கட்சி’ என்ற உள் மடிப்புகளுடனும் அதன் கலைப்புகளுடனும்தான் பயணித்து வந்தது. மாவோ பேசிய ஆயிரம் பூக்கள் பூக்கட்டும் என்பதற்கு அந்த இயக்கம் இடம் தந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் பூக்கள் உதிராமலும் இருக்காதே..

விடுதலை தலைவர்கள் காங்கிரஸ்காரர்கள் என அறியப்பட்ட பலரும் மோதிக்கொண்டு ஒன்றாகவும்தனித்தும்தான் இருந்துள்ளனர். சுரேந்திர பானர்ஜியா, கோகலே, திலகர்,

லாலாஜி, பிபின் என ஆரம்ப தலைவர்கள்- தொடர்ந்து மோதிலால், பின்னர் நேரு நேதாஜி என பலரும் ஏதோவொருவகை உள் மடிப்பு உட்குழு சோதனைகளை செய்தேயிருக்கின்றனர்.

அதனால்தான் அமைப்பு என பார்த்தால் தாய் அமைப்பு **Mother of all organisations** என்கிற வரலாற்று தன்மையை விடுதலைக்கால காங்கிரஸ் பெற்றுள்ளது. அங்கு ஏராள உள் சோதனைகளை அவரவர் தனியாகவோ குழுவாகவோ கட்சிக்குள் கட்சியாகவோ செய்து பார்த்துள்ளனர். இந்த அளவு விரிவான சோதனைகளுக்கு வேறு எந்த கட்சியும் இந்தியாவில் இடம் கொடுக்கவில்லை எனலாம். ஓரளவு கம்யூனிஸ்ட் கட்சியில் இந்த சோதனைகள் நடைபெறவே செய்தன. அவை பெரும்பாலும் உடைவிற்கே சென்றன.

காங்கிரசில் இந்த சோதனை விடுதலைக்குபின்னர் வெளியேறுதல்களாக இருந்தன. உள்ளிருந்த காங்கிரஸ் சோசலிஸ்ட்கள் விடுதலைக்குப்பின்னர் உடனடியாக வெளியேறி தனிக்கட்சி துவங்கினர். தனிக்கட்சியை வெளியே வைத்துக்கொண்டு காங்கிரசில் CSP யில் இருந்து கொண்டு பின்னர் அதிலிருந்து வெளியேற்றப்பட்ட கம்யூனிஸ்ட்கள் தனியே செயல்பட ஆரம்பித்தனர்.

கிருபளானி போன்றவர் காங்கிரசில் டெமாக்ரடிக் பிரண்ட் வைத்திருந்து படேல் டாண்டனுடன் ஒத்துப்போகாமல், நேருவின் ஆதரவையும் பெறாத சூழலில் வெளியேறி கிசான் மஸ்தூர் பிரஜா கட்சியை துவக்கினர்.

வங்கத்தில் பிரபுல்ல கோஷ், ஆந்திராவில் பிரகாசம், கேரளா கேளப்பன், பீகார் மகாமாய பிரசாத் என ஆங்காங்கே புகழ் வாய்ந்தவர்களும் ஏதோவொருவகையில் வெளியேறும் சோதனைகளை செய்தனர்.

கட்சிக்குள் கட்சி என்ற சோதனையை பிரிட்டிஷார் இருக்கும்வரை காங்கிரஸ் ஓரளவு சகித்துக்கொள்ளும் நிலையில் இருந்தது. விடுதலைக்கு பின்னர் அரசாங்கம் அமைத்த பின்னர் இதில் கறார் தன்மையை காட்டத்துவங்கியது. இந்த சோதனைகளை நடத்தியோர் மூச்சுத் திணறி வெளியேறினர்.

காங்கிரசில் இருந்துகொண்டே **govern properly or get out** எனப்பேசும் துணிச்சலை நாடாளுமன்றத்தில் அன்று கிருபளானி போன்றவர்கள் சோதித்தனர். படேல் கடுப்பானார். அமைப்பு முழுமையாக அவர் கட்டுப்பாட்டில் இருந்தது. **Govern or Get out** எனச் சொன்னவர்களுக்கெல்லாம் கட்டுப்படு அல்லது வெளியேறு என்ற நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டது.

இந்த படேல் மாடலைத்தான் இன்றுவரை இந்தியாவில் அனைத்துக் கட்சிகளும் வேறுபடுகின்ற தனிநபரிடம் அல்லது உட்குழுக்களிடம் கட்சியின் அரசாங்கத்தின் தலைமைகள் ஏன் பல்வேறு வெகுஜன அமைப்புகளின் தலைமைகளும் கூட எடுத்துவருவதைக் காண்கிறோம்.

கட்சிக்குள் கட்சி என்ற சோதனையை இந்திய அமைப்பு ஜனநாயகம் அனுமதிக்கவில்லை. அது பெருந்தோல்வியாகவே இதுவரை போய்க்கொண்டிருக்கிறது. அடிப்படை கொள்கைகளில் ஒற்றுமை - நடைமுறையாக்க கோளாறுகளில் போராட்டம் என்ற அளவில் கூட கட்சிக்குள் கட்சி எனும் உட்கட்சி போராட்டங்கள் உள் அமைப்பு போராட்டங்கள் வெற்றி பெறாமல் போவதையும் காண்கிறோம்.

எங்கள் அமைப்பில் பிரசத்திப்பெற்ற முழக்கம் ஒன்று எழுப்பப்பட்டது. இங்கு கம்யூனிஸ்ட்களுக்கு எதிராக காங்கிரஸ் சார்பானவர்கள் அதை எழுப்பினர். சிங்கத்திற்கு வாலாக இருப்பதைவிட நரிக்கு தலையாக இருப்பது மேல் என்பது அங்கு பிரிந்தவர் தந்த முழக்கம். இங்கு சிங்கம் பெரும்பான்மை நரி சிறுபான்மை என்ற பொருளில் கையாளப்பட்டது. நரிக்கு வாலாக இருப்பதைவிட என வேறு முழக்கங்கள் அங்கும் எழுந்திருக்கலாம்.

கட்சியோ அமைப்போ வேறு முகங்களை உள்ளுக்குள் வைத்திருப்பதில்லை. முகம் வேண்டுமெனில் தனி அமைப்பு என்பதே இங்கு ஜனநாயகம் இதுவரை தந்துள்ள பாடமாக இருக்கிறது. அது சிங்க முகமா நரி முகமா என்பதெல்லாம் மக்கள் தருகிற தீர்ப்பில் அமைகின்றன.

சிங்கத்தின் மீது நிரந்தர பிரியமோ நரி மீது நிரந்தர காழ்ப்போ மக்களிடம் இருப்பதில்லை. எவரை அவர்கள் ஆதரிக்கிறார்களோ அவர் சிங்க முகம் பெறுகிறார்…

தடுப்புக் காவல் சட்டம் **preventive detention Act** குறித்து 1953ல் நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்தது.

சர்தார் படேல், ராஜாஜி, கட்ஜூ என உள்துறை அமைச்சர்களாக இருந்தவர்கள் அதை கம்யூனிஸ்ட்களை கட்டுப்படுத்த தேவையாக இருப்பதாக நியாயப்படுத்தி வந்தனர். ரௌலட் வந்தபோது பிரிட்டிஷார் பேசுவது போல் இருக்கிறது என எதிர்ப்புக்குரல் வந்தன. கட்ஜூ சோவியத் யூனியன் இப்படிப்பட்ட சட்டங்களை வைத்திருப்பதை உறுப்பினர்கள் அறியவேண்டும் என்றார்.

கிருபளானி முறை வந்தவுடன் அவர் கடுமையாக அரசாங்கத்தை விமர்சித்துப் பேசினார். ரஷ்யாவை totalitarian அரசை உதாரணம் காட்டி பேசினால் நமது நாட்டில் தேர்தல்

ஜனநாயகம் பேச்சுரிமை என்ற நாடகம் கபடத்தனம் எதற்கு என அவர் கேள்வி எழுப்பிவிட்டு, இந்திய கம்யூனிஸ்ட்களை ஆதரித்தும் அவர்களை காரணம் காட்டி அடக்குமுறை சட்டம் அவசியமற்றது எனவும் பேசினார். அப்போது தன்னை சுற்றியிருந்த கம்யூனிஸ்ட்கள் எப்படி இன்று இருக்கின்றனர் என்பதையும் தன் பேச்சில் சுட்டிக்காட்டினார். அவரின் விவாத வரிகள்..

**"The communist representatives have been with us for the last few years. I have been sitting in their midst..I can say that they are amicable people..they are soft tongued, unless excited. That is true of me, that is true of the Treasury benches. That is true of our Prime Minister. Then, sometimes they, the communists, play to the gallery. We also sometimes do the same..**

**If appearances are to be believed, some of them look less like the proletariat, than many congressmen. Some communists speak good English, the King's or Queen's English now. They have Oxford or Cambridge accents, as good as our Prime Minister..**

**The communists in India have acquired many bourgeoisie habits. They even play cricket with the Treasury benches and the PM. And cricket is an imperial game. In Kashmir they are in alliance with the Congress. In Travancore Cochin they are offering terms of partnership with PSP. They are more in line with the foreign policy of the Govt than PSP. They have completely rehabilitated themselves. To think that the HM contemplated this act to be used against the Communists today is absurd"**

1954ல் கயாவில் சர்வோதயா பூதான் இயக்க தொண்டர்கள் மாநாடு கூட்டப்பட்டது. மாலை பொதுக்கூட்டம் என்கிற ஏற்பாடும் இருந்தது.

வினோபாஜி, ஜேபி, கிருபளானி, பிரபுல்ல கோஷ் கலந்துகொண்டனர். மாநாட்டில் இனி தன் கவனக்குவிப்பெல்லாம் பூதானில்தான் என வினோபாஜி சொல்கிறார். பிஎஸ்பி கட்சியில் ஜேபி, கிருபளானி போன்றவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கட்சி உள் விவாதங்களில் சற்று காயத்துடன் ஜேபி இருந்துகொண்டிருந்தார். அந்த மாநாட்டில் பேச அழைக்கப்பட்ட ஜேபி இனி என் உடல் ஆவி அனைத்தும் -ஜீவன் தானம்- பூதானுக்கு என அறிவித்தார். கல்விப்பணியில் சிறப்பாக காரியமாற்றிக்கொண்டிருந்த ஆஷாதேவியும் பூதான் என்றார். இனி constructive work என்பது பூதான் வேலைதான் என வினோபாஜியும் அழுத்தம் கொடுத்தார்.

கிருபளானிக்கு சங்கடம் நேர்ந்தது. மாலை கூட்டத்தில் அவருக்கு பேச வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் பூதானை கடவுளுக்கு உருவகப்படுத்திக்கொண்டு தன்னை நசுங்கிய பழமாக உருவகப்படுத்தி, அப்படி வீணாகிப்போன பழத்தை கடவுளுக்கு கொடுக்க மனம் ஒப்பவில்லை எனப்பேசினார். கோபமும் ஆத்திரமும் ஈகோவும் கொண்ட தான் ஒரு **damaged fruit** என்று பேசினார். இதில் ஒருவகை எள்ளல் இருப்பதாகவே எனக்குப்படுகிறது.

ஜேபியும் வினோபாவும் **partyless democracy** எனப்பேசத்துவங்கினர். சர்வோதயா தொண்டர்கள் அரசியலில் சிக்கவேண்டாம் என்றார் வினோபாஜி. வாக்களிக்கக்கூட வேண்டாம் என்கிற நிலை கூட எடுக்கப்பட்டது என்பது ஆச்சர்யமான செய்தி. கிருபளானிக்கு இதில் விமர்சனம் இருந்தது. கட்சி அரசியல் மோசமாக இருப்பது உண்மை, மாற்று இல்லாமல் அதை சரி செய்ய போராடாமல் அப்படி பேசுவது குறித்து அவர் விமர்சித்தார்.

வினோபாவிற்கு நேரு, லால்பகதூர், இந்திரா என தொடர்ந்த பிரதமர்கள் ஆதரவு ஓரளவிற்கு கிடைத்தது. இந்திரா பவுனார் வார்தா வந்து சென்றார். பல முதலமைச்சர்கள் வினோபாவிடம் வந்து ஆசி வாங்கிச்சென்றனர். கிராமப் பயணங்களுக்கு அன்றாடம் வினோபாவின் செலவுகளை அரசாங்கம் ஏற்பது என்ற முடிவில் தினம் ரூ 2500 என ஒதுக்கப்பட்ட செய்தியை கிருபளானி தருகிறார்.

இந்திராவின் ஆட்சிக்காலம் எமர்ஜென்சி என்ற உயர் அதிகாரம் வரை சென்றது. ஜேபிக்கும் வினோபாஜிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சர்வோதய தொண்டனுக்கு எவர் பகைவராக இருக்கமுடியும் என வினோபாஜி கேள்வி எழுப்பினார்.

காந்தியம் குறித்த வாதம் பிரதிவாதம் எழுந்தது. கிருபளானி **the saint and satyagrahi** எழுதினார். வினோபாஜி தன் உரைகளில் கிருபளானியை மறுத்து வந்தார். தான் காந்தியின் தோள்களில் அமர்ந்து உலகைப் பார்ப்பதால் காந்தியைவிட அதிக தூரம் தனக்கு வெளிச்சமாகிறது என்றார். கர்மமுக்தி freedom from work என வினோபாஜி பேசினார்.

கிருபளானி நீங்கள் அரசியலை விட்டு சுவதர்மா தேடுவதற்கு வாழ்த்துகள் என்ற செய்தியை அனுப்பினார்.

இப்படி காந்தியுடன் நெருக்கமாக வாழ்ந்த பல பெருந்தலைகள் தங்கள் தேடல் அனுபவ சாலையில் சில நேரங்களில் எதிரும் புதிருமாக சந்தித்த வரலாற்றைக்காண்கிறோம்.

எது சரி எவர் சரி என தீர்ப்பிட நான் வரவில்லை. அவர்கள் நேர்மையாக சில நேரங்களில் தங்கள் உளவியல் சிக்கல்களுடனும் கருத்தை மிகவும் தரமாகவும் மரியாதையை குறைக்காமலும் வைத்த மரபை விட்டுச்சென்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

இன்று அரசியல் என்பதில் name calling என்கிற கூவல் அதிகமாகியிருப்பதை முகநூல் அனுபவம் தருகிறது. மிகவும் வயதானவர்கள் என்றால் அவர்களுக்கு அனுபவம் கூடி பரபரப்பு குறைந்து நிதானம் கைகூடியிருக்கும் என்ற புரிதல் எனக்கு முன்பு இருந்தது. இப்போதெல்லாம் அந்தப்புரிதல் ஏனோ பட்டுப்போய்க்கொண்டிருக்கிறது..


gettyimages
Universal History Archive








© BCCL

ஆசிரியரின் பிற நூல்கள்



1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

**5. Trade Justice in Telecom**

**6. Selected Ideas of O.P Gupta**

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்...

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்
7. காந்தியும் கம்யூனிசமும்
8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்
9. வரலாற்றில் சௌரி சௌரா (நூற்றாண்டின் நினைவாக)
10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்

www.pattabiwrites.in